சக்தியும் பயனும்



சி. சுப்பிரமணியம்

இன்று உலகில் பெரும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. தொழில் முன்னேற்றமும், விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளும் மனித வாழ்க்கை முறைகளையே மாற்றி வருகின்றன. இந்த மாற்றங்களிலிருந்து ஒதுங்கியிருக்க முடியாதபடி, உலகின் ஒவ்வொரு பகுதியும ஒன்றோடொன்று இணைந்து இருக்கின்றது. ஆகையால் நம் நாடும் மற்ற நாடுகளின் ஓட்டத்தை யொட்டிச் செல்லத்தான் வேண்டும்.

உலகின் முன்னேற்ற வேகம் என்பது, ஏற்கெனவே முற்போக்கடைந்துள்ள நாடுகள் மேலும் மேலும் அடையும் முன்னேற்றத்தின் அளவைக் கொண்டுதான் கணக்கிடப் படுகிறது. எனவே நாம் அந்த வேகத்தை எட்டிப் பிடிக்க வேண்டுமானால், மிக மிகத் துரித கதியில் சென்றாக வேண்டும்.

இந்த அடிப்படை நோக்கத்துடன்தான் நாம் ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசையாக ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறோம்.

ஒரு நாடு முன்னேற்றம் அடைவது அவசியம் என்பதற்குக் காரணம் சொல்லத் தேவையில்லை. ஆனால் விஷயமறிந்தவர்கள் எனக் கருதப்படும் சிலர் கூட ''முன்னேற்றம் எதுவும் தேவையில்லை, இருப்பது இருக்கிறபடி இருந்தால் போதும்'' என்பதாகப் பேசி வருவதால் உலகின் போக்கையும், நம் நாட்டின் நிலையையும் எடுத்துணர்த்தி, ஒப்பிட்டுக் காட்ட வேண்டியதிருக்கிறது.

பழம் பெருமை பலன் தருமா?

கலாச்சார, ஆன்மீகத் துறைகளில் நமக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு என்பது உண்மை. ஏன்? பொருளாதாரத் துறையில்கூட, நாம் ஒரு காலத்தில் சிறந்து விளங்க வில்லையா, நம் முன்னோர்கள் கடல் கடந்து சென்றும் வாணிபம் செய்யவில்லையா, மற்றவர்கள் மரவுரி தரித்துக் காட்டுமிராண்டி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த நேரத்தில், நம்மவர்கள் மெல்லிய ஆடைகளை நெய்து உடுத்தும் அளவுக்கு நாகரிக வாழ்க்கை வாழ வில்லையா என்று கேட்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பண்டைய பெருமையையே பேசிக் கொண்டிருப்பதால் பயனில்லை. இன்றைய நிலை என்னவென்பதையும் பார்க்க வேண்டும்.

காட்டுமிராண்டிகள் எனச் சொல்லப்பட்ட மக்கள் வாழ்ந்த பகுதிகளில் பல—குறிப்பாக மேல் நாடுகள்—கடந்த சில ஆண்டுகளில் மிகப் பெரும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்து விட்டன. நம்மையெல்லாம் பின் தள்ளி வெகுதூரம் சென்று விட்டன. அதே காலத்தில், நம் நாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பது மட்டுமல்ல, தொழில், கலைத்துறைகளில் நம்மவர் பெற்றிருந்த திறமை, கை நுட்பத் தேர்ச்சி தேய்ந்து விட்டதையும், சிலவற்றில் அடியோடு மறைந்து போய் விட்டதையும் காண்கிறோம். மேல் நாடுகளில் தொழில் புரட்சி ஏற்பட்டு, இயந்திரச் சாதனங்களின் உதவியால் மக்கள் தம் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்ட நேரத்தில், நம் மக்களிடையே எவ்விதச் சலனமும், மாற்றமும் ஏற்படவில்லை என்பதைக் காண்கிறோம்.

முன்னேற்றப் பணி

இதற்குக் காரணம், நம் மக்கள் முன்னேற்ற ஆர்வமே இல்லாமல் இருந்து விட்டார்கள் என்பதல்ல. பன்னெடுங் காலத்திற்கு முன்பே நாகரிக வாழ்வு வாழ்ந்தோம் என்ற பெருமையுணர்வில், உலகின் மற்றப் பகுதிகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களை பற்றி அதிகம் கவலைப்படாமல் இருந்திருக்கக்கூடும். எனினும் அதைவிட முக்கியமான காரணம், நம் நாட்டில் ஒரு ஜனநாயக அரசாங்கம் இல்லாதிருந்ததுதான். அத்தகைய ஓர் அரசாங்கம் இருந்திருந்தால், நாட்டு முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுக்கவும், மக்களிடையே ஓர் உற்சாகத்தை, உத்வேகத்தை உருவாக்கி, மக்களது சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி அத்தகைய முன்னேற்றப் பணியில் ஈடுபடுத்தியிருக்கவும் முடிந்திருக்கும்.

அந்நிய ஆட்சி அகன்று, இப்போது நம் நாட்டில் சுதந்திர அரசாங்கம் ஏற்பட்டுள்ளதால் தான் இன்று அத்தகைய முன்னேற்றப் பணி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. நெடுங்காலமாகக் குறிப்பிடத்தக்கவகையில் ஒன்றுமே செய்யப்படாமல் இருந்ததால், இன்று முன்னேற்ற முயற்சி என்பது பிரம்மாண்டமான அளவில் செய்யப்பட வேண்டியதிருக்கிறது. அதையும் ஓர் ஒழுங்கு முறையோடு செய்தாக வேண்டும். இத்தனை காலம் கட்டுண்டிருந்தோம். இனி நாம் விரும்புகிறபடியெல்லாம் முன்னேற்றம் காண உரிமையும், வாய்ப்பும் இருக்கிற

தென்பதால், கட்டவிழ்த்து விடப்பட்ட காளை போலச் செயலாற்றக்கூடாது.

சக்தி பயன்பட

காட்டாற்று வெள்ளத்தில் அடங்கியுள்ள சக்தியும் பயனும் பிரம்மாண்டமானது தான். ஆனால் அதை அணை கட்டித் தேக்கி, கால்வாய்கள் மூலம் வேண்டிய இடங்களுக்கு, உரிய முறையில் நீரைப் பாய்ச்சினால் தான் பலனை முழுமையாக அனுபவிக்க முடியும். அதே போல் நம் மக்களிடையே நிறைந்திருக்கும் பல்வேறு சக்திகளை யெல்லாம் முறைப்படுத்தி, வகைப்படுத்திப்பயன்தரும் வகையில் திருப்பிவிட வேண்டும்.

திட்டமிட்ட முன்னேற்றத்தின் கோட்பாடு அதுதான். அந்த முறையில் பார்க்கும்போது, நம்மிடமுள்ள சக்திகள் என்னென்ன? அவற்றைப் பயன்தரும் வகையில் பயன்படுத்த நாம் எடுத்து வரும் நடவடிக்கைகள் என்னவென்பதைக் கவனிக்க வேண்டும்.

★





காந்திஜியின் கருத்துக்கள்

*நிரந்தர சமாதானத்தை அடைய முடியும் என்பதில் நம்பிக்கை கொள்ளாவிட்டால், அது மனித இயல்பின் தெய்விகத் தன்மையில் அவநம்பிக்கை கொள்ளுவதாகும்.

*வல்லரசுகள் ஆயுத ஒழிப்புச் செய்யத் தைரியமாக முன்வந்தாலொழிய சமாதானம் கிட்டப் போவதில்லை. சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வல்லரசுகளுக்கு இந்த நம்பிக்கையை நிர்ப்பந்தமாக ஊட்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. அரை நூற்றாண்டு காலம் அஹிம்சையை விடாமல் அனுஷ்டித்து வந்த பிறகு அஹிம்சையின் மூலம்தான் மனித வர்க்கத்தைக் காப்பாற்ற முடியும் என்று எனக்கு நிச்சயமாகப் படுகிறது.

*சுரண்டல் புத்தி ஒழிந்த மாத்திரத்தில், ஆயுதங்கள் யாவும் தாங்க முடியாத சுமையாகத் தோன்றிவிடும். தேசங்கள் பரஸ்பரம் ஒன்றை ஒன்று சுரண்டுவதை நிறுத்தினாலொழிய உண்மையான ஆயுத ஒழிப்பு நடைபெறாது.

*உலகத்தில் நான் யாருக்காகவும் பயப்படமாட்டேன். கடவுளுக்குத்தான் பயப்படுவேன். யார்மீதும் நான் கெட்ட எண்ணம் கொள்ளமாட்டேன். யாருடைய அநீதிக்கும் நான் உண்மையினால் பொய்யை வெல்லுவேன்! பொய்யை எதிர்த்துப் போராடுவதில் நான் சகல துன்பங்களையும் எதிர்த்துப் போராடுவேன்.

*சத்தியாக்கிரகிக்குக் கால வரம்பு எதுவும் கிடையாது. அதேபோல, துன்பத்தைத் தாங்கிக் கொள்ளுவதில் அவனுக்குள்ள ஆற்றலுக்கும் வரம்பில்லை. இதனால்தான் சத்தியாகிரகத்தில் தோல்வி என்ற சமாச்சாரமே கிடையாது!

*நான் என்ற அகந்தையை ஒழிப்பது, மிகமிகப் பணிவோடு நடந்து கொள்வது, அதிகமான பொறுமை காட்டுவது, தெளிவான நம்பிக்கையோடிருப்பது. இந்தக் குணங்களெல்லாம் உடையதுதான் சத்தியாக்கிரகம். சத்தியாகிரகத்துக்கு உரிய சன்மானம் சத்தியாக்கிரகமே.

*சத்தியாக்கிரகத்தில், பொய் பித்தலாட்டங்களுக்கு இடம் இல்லை. இன்று உலகத்தில் பொய்யும் பித்தலாட்டமும்தாம் நிறைந்திருக்கின்றன. இந்த மாதிரியான நிலைமையை நான் கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இன்று அப்படி இருந்தேனால், உலகை நெருப்புச் சூழ்ந்து கொண்டிருக்கும்போது, கடவுள் எனக்குக் கொடுத்துள்ள செல்வத்தை நான் உபயோகிக்காத காரணத்திற்காக என்னை அவர் தண்டிப்பார்.

—தொகுத்தது:
மேவானி கோபாலன்

''நொண்டிப் புலி'' என்றும், தாமர்லேன் என்றும் 'பாவி'கள் குறிப்பிட்ட தைமூரின் கதை இது. வையமுழுவதையும் பொடி சாம்பலாக்க முனைந்தவனின் கதை இது.

தைமூரின் காலடியில் ஐம்பதாண்டு ''காலம்'' மிதியுண்டு கிடந்தது, எண்ணற்ற பல நகரங்களும், அரசுகளும். அவனது இரும்புப் பாதத்தில் நசுக்குண்டழிந்தன எண்ணற்ற அரசுகள். தைமூர் சென்ற நானுதிசைகளிலும் குருதி வெள்ளம் அலைவீசி ஓடிற்று.

ஜிஹாங்கிர்.....அவனது ஆருயிர்ச் செல்வன். அருமருந்தன்ன தன் புதல்வனை விழுங்கிய மரணத்தைப் பழி தீர்ப்பதற்காகத் தன்னால் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளிலுள்ள மக்களைக் கொன்று மலைமலையாகக் குவித்தான்.

தைமூரின் புலல்வன் ஜிஹாங்கிர் இறந்தபோது சாமர்க்ந்தின் மக்கள் கறுப்புடை அணிந்து தமது சிரங்களில் தூசும், சாம்பலும் படிந்த தோற்றத்துடன் தைமூரைச் சந்தித்தனர். அன்று முதல் ஓட்டரேரே என்னும்

உலகத்தின் இதய கீதம்

மாக்ஸிம் கார்க்கி

ஊரில் தங்கினான். அந்திமநாள் வரும்வரை அவன் முகத்தில் இளஞ்சிரிப்புக்கூட மலரவில்லை. இதயத்தில் ஒரு துளி இரக்கத்துக்கும் இடந்தராமல், கடுகடுத்துச் சினம் பொங்கும் முகத்தோடு, வணங்காமுடியனாக முப்பதாண்டு காலமிருந்தான் தைமூர்!

உலகிற்கு இரத்தவெறி பிடித்த சாபக்கோடாகத் தோன்றியவன் சாவின் சேவகன், தைமூர். ஒரு தாயின் முன்னிலையில் எவ்வாறு தலைவணங்கி நின்றான் என்பதைக் கூறும் கதை இது:

* * *

கனிகுலா பள்ளத் தாக்கிலே ஒரு நாள்...

மல்லிகைப் பூக்களும், ரோஜா மலர்களும்அங்குச் சரஞ்சரமாகப் பூத்துக் குலுங்கின. சாமர்க்கந்துக் கவிஞர்கள் அந்தப் படுகையை 'மலர்ப் படுகை' என்று புகழ்வார்கள். நகரில் நெடிதோங்கி நின்ற மசூதிகளின் மாடங்கள் தொலைவிலே தெரிந்தன.

தைமூர் பெக், எழில்மிகு பட்டங்கி அணிந்திருந்தான். விலை மதிக்க ஒண்ணாத முத்துச் சரமோடிய அங்கி அது. அதில் தைக்கப்பட்டிருந்த முத்துக்கள் ஐயா

யிரத்துக்குக் குறையாது! அவனது நரைத்த தலைமீதணிந்திருந்த தொப்பியில் கோக்கப்பட்டு அசைந்தாடிய சிவந்த மாணிக்க மணியானது உலகை அளந்தறியும் பயங்கரமான சிவப்பு விழிபோலத் தோன்றிற்று.

கூடாரத்தின் தரைமீது விரிக்கப்பட்டிருந்த இரத்தின ஜமுக்காளத்தின் அழகு, நெஞ்சை அள்ளியது. முன்னூறு தங்க ஜாடிகள் அந்த விரிப்பின் மீது வைக்கப்பட்டு இருந்தன. அத்தனையிலும் திராட்சை மதுரசம்! இராஜ விருந்துக்கான ஏற்பாடுகள்!

தைமூருக்குப் பின்னால் சற்று ஒதுங்கி இசைவாணர்கள் வீற்றிருந்தனர். அவனுக்கு அருகே யாரும் இல்லை. தைமூரின் காலருகே அவனது உறவினர்கள், அரசர்கள், இளவரசர்கள், தளபதிகள் அமர்ந்திருந்தார்கள். உலகை அழித்தொழிக்கும் அந்த மன்னனுடன் அந்தக் கூடடத்தினருள் கவிஞர் கிர்மானியும் இருந்தான்.

''கிர்மானி'' என்றழைத்துக் கவிஞனிடம் பேசத் தொடங்கினான் தைமூர்.

''என்னையே நான் விற்பதானால் நீ என்ன விலை கொடுப்பாய்?''

''இருபத்தைந்து அஸ்கர்கள் தருவேன்'' என்றான் கவிஞன்.

''என் இடுப்பில் அணிந்துள்ள கச்சைக்கே அந்த விலையாகுமே!'' என்று வியப்புடன் கேட்டான் தைமூர்.

''அதற்குத்தான் அந்த விலை மதிப்பு. தங்கள் விலை மதிப்பு ஒரு செப்பு நாணயம் கூடப் பெறாது!''

உலகுக்கே, அழிவூட்ட வந்தவனான அந்த அரசர்க்கரசன் முகம் நோக்கிக் கவிஞன் கிர்மானி இவ்வாறு கூறினான். மெய்ம்மையின் நண்பன். அவன் புகழ் நெடிது வாழ்க!

திகிலும் திகைப்பும் நிலவிய அமைதியற்ற வேளை அது!

கோடையிடி முழக்கும் முகிலிடையிருந்து மின்னற் கோடு கீறி எழுவது போல, திகில் நிறைந்த அந்தச் சூழ்நிலையின் அமைதி கலைத்து ஒரு குரல் ஆணவ ஓலம் ஒலித்தது. அதிலே மரணத்தால் தாக்குண்ட ஆன்ம வேதனை கலந்திருந்தது. உயிர் வாழும் மனிதர் அனைவரையும் அடியோடு வெறுக்கும் அந்தக் குரல் சுல்தான் பேயசித்தை வெற்றி கொண்ட தைமூரின் செவியில் பாய்ந்தது.

''யாரது? பாருங்கள்'' பேரரசன் தைமூர் கட்டளையிட்டான்.

''எவளோ ஒருத்தி பைத்தியம் போலிருக்கிறது. அழுக்குப் படிந்த தோற்றம். கந்தல் உடை. அராபிய மொழி பேசுகிறாள். உலகு முழுவதையும் தன் கொற்றக்குடை நிழலில் ஆளும் பேரரசனைக் காண வேண்டுமென்று அடம்பிடிக்கிறாள்!'' என்று பதில் கிடைத்தது.

''அவளை உள்ளே அழைத்து வா!''

பெண் ஒருத்தி தைமூரின் முன்பு வந்து நின்றாள்.

சாயம் மங்கிப்போன ஆடை. அதுவும் கந்தல். அவளது கரிய நிறங்கொண்ட கூந்தல் அவிழ்ந்து மார்ப் பகத்துக்குத் திரையிட்டு மறைத்தது. கண்களிலே சினம் பொங்கிற்று. முகம் சிவந்து தோன்றிற்று. அந்த நொண்டிச்

சக்கரவர்த்தி எதிரே நின்று தன் கரத்தை நீட்டினாள். அந்தக் கை சற்றும் நடுங்காமல் உறுதியுடன் நின்றது.

''பெயசித் சுல்தானை வெற்றி கொண்டது தாங்கள் தானே?''

''ஆம். அது மட்டுமல்ல, பெற்ற வெற்றிகள் பல. ஆனால் வெற்றிகளில் இன்னும் எனக்கு அலுப்புத் தட்டவில்லை! பெண்ணே, உனக்கு என்ன வேண்டும்?''

''சொல்லுகிறேன் தாங்கள் என்ன செய்திருப்பினும் சரியே, தாங்கள் ஓர் ஆண்மகன் தான். நான் ஒரு தாய். தாங்கள் மரணத்துக்குச் சேவை புரிகின்றீர்கள். நான் வாழ்க்கைக்கு மனித ஜீவியத்துக்குச் சேவை யாற்றுகிறேன். தாங்கள் எனக்குப் பாவமிழைத்து விட்டீர்கள். எனவே அது குறித்து முறையிட்டுப் பரிகாரம் கோர நான் வந்திருக்கிறேன். 'நீதி, வலிமையில் அடங்கியுள்ளது' என்ற கொள்கையுடையவர் என்று தங்களைப்பற்றிக் கூறுகிறார்கள். நான் அதை நம்பவில்லை. நான் ஓர் அன்னை. எனவே தாங்கள் எனக்கு நீதி வழங்கத்தான் வேண்டும்''

துணிச்சல் மிக்க இந்த சொற்றொடர்களுக்குத் துணைபுரிந்த ஆற்றல் எது என்பதை அந்த அரசன் உணர்ந்தான்.

''உட்கார்ந்து பேசு, நீ என்ன சொல்லுகிறாய்?''

அரசர்கள் புடை சூழ்ந்து அமர்ந்திருந்த அந்த இரததினக் கம்பளத்தின் மீது அவர்களிடையே அவள் வசதியாக அமர்ந்து பேசத் தொடங்கினாள்.

''நான் சால்னோ பிராந்தியத்தைச் சேர்ந்தவள். அது இத்தாலியில் வெகு தொலைவிலிருக்கிறது. அந்தப் பகுதிகள் தங்களுக்குத் தெரியாதவை. என் தந்தையும் கணவனும் மீனவர்கள். என் கணவர் அழகு மிக்கவர். அவர் மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார். அவருக்கு இன்பமளித்தவள் நான்தான். எனக்கு ஒரு புதல்வன் இருந்தான். உலகிலேயே அழகு மிக்க குழந்தை''

''என் ஜிஹாங்கீரைப் போல'' அந்தப் போர் வீரன் முணுமுணுத்தான்.

''என் குழந்தை அழகு நிறைந்தது. மதிநுட்ப மிக்க சிறு குழந்தை அவன். அரபு நாட்டுக் கடற்கொள்ளைக்காரர்கள் எங்கள் கடற்பகுதிக்கு வந்தபோது அவனுக்கு ஆறு வயதுதான். அவர்கள் என் தந்தையையும், கணவனையும் சிரச் சேதம் செய்தனர். மற்றும் பலரும் கொலை செய்யப்பட்டார்கள். என் அருமைச் சிறுவனையும் தூக்கிச் சென்று விட்டார்கள். என் அன்புச் செல்வத்தைத் தேடி நான் கடந்த நான்காண்டுகளாக இந்த உலகமெல்லாம் சுற்றி அலைகிறேன் இப்போது அவன் தங்களிடம் இருக்கிறான். இது எனக்குத் தெரியும் பெயசித் சுல்தானுடைய ஆட்கள் அந்தக் கடற்கொள்ளையரைப் பிடித்தார்கள். தாங்கள் சுல்தானை வெற்றி கொண்டு அவரது உடைமைகளைக் கைப்பற்றியிருக்கிறீர்கள். ஆகவே என் புதல்வன் எங்கிருக்கிறான் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கும், அவனைத் திருப்பிக்கொடுங்கள்'' என்று அழுத்தமாகக் கூறினாள் அன்னை!

''அவளுக்குப் பைத்தியம்'' என்று பரிகசித்துச் சிரித்தனர், தைமூரின் நண்பர்களான அரசர்களும், பிரதானிகளும், தளபதிகளும்!

ஆனால் சமாதானத்துக்கு வெம் பகைவனாக விளங்கிய தைமூர் பேசினான்.

"பெண்ணே! கண் காணாத அந்தப் பிரதேசத்திலிருந்து கடல்களையும், நதிகளையும், நெடுமலைகளையும் இருளடர்ந்த கானகங்களையும் கடந்தும் நீ எப்படி இங்கு வந்தாய்? வனவிலங்குகளிடமிருந்தும், அவற்றினும் கொடிய மனிதர்களிடமிருந்தும் நீ எப்படித் தப்பித்தாய்? திக்கற்றவர்களுக்கு ஒரே துணையாகவும், நம்பகமானதாகவும் விளங்குகின்ற எந்த ஓர் ஆயுதமுமில்லாமல் நீ எவ்வாறு சுற்றித் திரிய முடிந்தது? உன் மீது நான் நம்பிக்கை கொள்ளுவதற்கு இதை நீ எனக்கு தெளிவு படுத்த வேண்டும்"

இடையூறுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதான தாய்மையின் அன்பைப் போற்றிக் கூறுவோம். உலகனைத்தையும் ஊட்டி வளர்க்கும் அன்னையின் பெருமையைப் பாடி மகிழ்வோம். மனிதனிடத்தே பொலியும் எழில் வளம் யாவும், பகலவனின் ஒளிக்கற்றைகளிலிருந்தும் தாய் கனிந்து ஊட்டிய பாலிலிருந்தும் பெறப்பட்டவை ஆகும். நமக்கு வாழ்வின் பாசத்தை உணர்த்துவதும் இதுவே.

அவள் கூறினாள்: "நான் சுற்றி அலைந்தபோது இடையிலே ஒரு சமுத்திரம் என்னை எதிரிட்டது அதிலே பல தீவுகளும், மீன்பிடி படகுகளும் இருந்தன. அன்புக்குரியவனைத் தேடிச் செல்லும்போது காற்றும் துணை புரியும். கடற்கரையிலே பிறந்து ஆளானவர்களுக்கு நதியில் நீந்துவது ஒரு பொருட்டல்ல. மலைகளைப் பற்றியா கேட்டீர்கள்? நான் கவனிக்கவே இல்லை! அடர் வனங்கள் பல இருந்தன. காட்டுப் பன்றிகள், கரடிகள், சிங்கங்கள் எத்தனையோ எதிர்ப்பட்டன. காளைகள் பயங்கரமாகத் தலையைக் குத்தியபடி ஓடி வந்தன. சிறுத்தைப் புலிகள் இரண்டு முறை என்னை உற்று நோக்கின. அவற்றின் கண்கள் தங்கள் கண்களைப் போன்று விளங்கின. ஆனால் விளங்குகளுக்கும் இதயமிருக்கிறது. தங்களுடன் பேசுவது போலவே நான அவற்றுடனும் பேசினேன். 'நான் ஒரு தாய்' என்று நான் கூறியதை அந்த விலங்கினங்கள் நம்பின. என் மீது கொண்ட இரக்கத்தால் அவை பெருமூச்சுவிட்ட வண்ணம் தம் வழியே சென்று விட்டன. மிருகங்களும் கூடத் தமது குட்டிகளை நேசிக்கின்றன என்பதும், தமது உயிரைக் காத்துக்கொள்வதற்காகவும் சுதந்திரத்தைக் காத்துக் கொள்வதற்காகவும் மனிதனுக்கு நிகராக அவை மிகத் திறமையுடன் போராட உணர்ந்துள்ளன என்பதையும் தாங்கள் அறிவீர்கள் அல்லவா?"

"நன்று சொன்னாய் பெண்ணே" என்றான் தைமூர். "விலங்குகள் மிக உறுதியுடன் நேசிக்கின்றன என்பதும் மனிதனைவிடக் கடுமையாக, உறுதியாகப் போராடுகின்றன என்பதும் எனக்குத் தெரியும்" என்று அந்தச் சக்கரவர்த்தி உறுதியுடன் கூறினான்.

அவள் தொடர்ந்து பேசினாள்.

"ஆண்கள் அனைவரும் தமது அன்னையர்க்கு எப்போதும் குழந்தைகள்தாம். ஒவ்வொருவருக்கும் அன்னையுண்டு. ஒவ்வொருவனும் தாயொருத்திக்கு மகனாக இருப்பவனே. சக்கரவர்த்தியே! தாங்களும் பெண்ணொருத்திக்கு மகன் தான். தாங்கள் கடவுளைக்கூட மறுத்து விடலாம். ஆனால் இதை மறுக்க முடியாது. எனக்கு என்

அன்பு மகனைத் தந்துவிடுங்கள். நான் அவனை ஈன்றவள். அவனை நேசிப்பவள்''

மோசசையும், முகமதையும், கொடியோரால் கொலையுண்ட இயேசுவையும் ஈன்றளித்த தாய்மையைப் போற்றி வணங்குவோம்.

மகத்தான மனிதர்களை ஈன்றளிக்கும் அன்னையை வணங்குவோம். அரிஸ்டாடில், பர்தூசி, சாதி, ஓமர்கயாம், இஸ்கந்தர், அந்தகரான ஹோமர் இவர்கள் அனைவரும் அவள் ஈன்ற குழந்தைகளே. அவர்கள் அனைவரும் அவளது மார்பகத்தே சுரந்த அமுதுண்டு வளர்ந்தவர்கள் தாம். அவர்களது பிஞ்சுக்கரம் பற்றி உலகிற்கு அழைத்து வந்து காட்டியவள் அன்னைதான். உலகின் பெருமையனைத்தும் அன்னையரிடமிருந்து பெறப்படுவனவே.

தைமூர் — குருகான் நரை முதிர்ந்த நொண்டிப்புலி எண்ணிலாத நகரங்களைப் பொடி சாம்பலாக்கிய மன்னன்-சிந்தனையில் மூழ்கினான்.

நீண்ட நேரம் மௌனம் நிலவியபின் தன்னைச் சூழ்ந்திருப்பவர்களை ஒருமுறை பார்த்துவிட்டுக் கம்பீரமாகக் கூறத் தொடங்கினான்:

''கடவுளின் சேவகனாகி நான் கூறவேண்டியது இது. என் முன்னிலையில் ஒரு பெண் அமர்ந்திருக்கிறாள். இதுவரை நான் சற்றும் அறிந்திராத உணர்வுகளை இவள் என் ஆன்மாவில் கிளர்ந்தெழச் செய்திருக்கிறாள். இவள் என்னெதிரே சரிசமானமாக நின்று பேசுகிறாள். அவள் இறைஞ்சவில்லை. மன்றாடவில்லை. நிர்ப்பந்தமாகக் கோருகின்றாள். இவள் ஏன் இத்தனை வலுவுடன் விளங்குகிறாள் என்பதை நான் புரிந்துகொண்டேன். அவள் நேசிக்கின்றாள். அன்பு பாலிக்கின்றாள். இவளது வாழ்வின் ஒளிப்பொறி அவளது குழந்தைதான். என்பதையும் பற்பல நூற்றாண்டுக் காலம் வரை நின்று சுடர் வீசும் ஒளிச் சோதியை அந்தச் சிறு ஒளிப் பொறி மூட்டி வைக்கும் என்பதையும் அன்பு அவளுக்கு உணர்த்தியுள்ளது!''

தேசங்களுக்குத் துன்பவடிவாக வந்த தைமூர் மீண்டும் மௌனத்தில் மூழ்கினான். சற்று நேரம் கழித்துத்தான் பேச்சைத் தொடர்ந்தான்.

''கடவுளின் சேவகனான நான் கட்டளை இடுகின்றேன். முன்னூறு குதிரைப்படை வீரர்கள் இக்கணமே என் தேச முழுவதிலுமுள்ள மூலை முடுக்குகளுக்கு எல்லாம் சென்று இந்தப் பெண்ணின் குழந்தையைக் கண்டுபிடிக்க முனைய வேண்டும். நானும் இவளும் இங்குக் காத்திருப்போம். அந்தக் குழந்தையைக் கண்டுபிடித்து அழைத்து வருபவன் தகுந்த சன்மானம் பெற்று வாழ்வான். இது தைமூரின் கட்டளை! பெண்ணே! நான் கூறியது சரிதானே?''

தன் முகத்தின் மீது படிந்திருந்த கரிய கூந்தலைப் பின்னுக்கு ஒதுக்கிவிட்டுப் புன்னகை புரிந்தவளாய்க் கூறினாள் அவள்.

''ஆமாம்! மன்னவா!''

அந்தப் பயங்கரமான முதிய மனிதன்-சக்கரவர்த்தி தைமூர் மௌனமாக எழுந்து அவளுக்குத் தலைவணங்கி மரியாதை செலுத்தினான்.

இது முற்றிலும் உண்மை. இங்குக் கூறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் உண்மையே. நம் அன்னையர் இதை உணர்வர். அவர்களைக் கேளுங்கள். அவர்கள் தெளிவாகக் கூறுவார்கள்.



அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
காளி மார்க்
Kali mark
வாத்திய கோஷ்டித்
தலைவர் விரும்புவதும்
காளி மார்க் பானம்தான்.
ஆயிரக் கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாறாத ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளி மார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

கனவுகளின் முடிவுகள்

மனிதனால் தூங்காமல் உயிருடன் வாழ முடியாது. மனிதன் உயிர் வாழத் தூங்கியே ஆகவேண்டும். தூங்கும்போது, கனவு காணாமல் தூங்க முடியாது! மனிதர்கள் மட்டுமல்லர், தூங்கும் பிராணிகள்கூடக் கனவுகள் காண்கின்றன. இதை விவரம் தெரிந்த நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கனவு காண்பது இயற்கை என்பதால், யாரும் கனவுகளைக் கண்டு அஞ்சக்கூடாது. கனவுகள் எதுவும் ஒரு சில விளைவுகளுக்கு மேல் தோன்றுவதில்லை. எப்படிப்பட்ட கனவுகள் தோன்றினாலும், கனவுகளில் முடிவுகள் தாம் முக்கியம்! கனவுகளைக் காண்பவர்கள், கனவுகளின் முடிவுகள் என்ன என்பதைத் தினமும் டைரியிலேயோ, ஒரு காகிதத்திலோ குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். இந்த முடிவுகள் உங்கள் மனம் என்ன செய்யத் துடிக்கிறது என்பதை விளக்கும்! உள்ளுணர்வின் எண்ணம் என்ன என்பது தெரியும். உள்ளுணர்வு மனிதர்களுடைய கட்டுக்கு அடங்காதது!



கனவுகளின் முடிவு கெட்டதாக இருந்தால், நமது மனம் கெட்டது செய்யத் துடிக்கிறது என்று விழிப்படைந்து, மனத்தை கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டும். வீண் சிந்தனைகளுக்கு இடம் தராமல், உபயோகமான வேலைகளில் ஈடுபடவேண்டும்.

காதல் கொண்டிருக்கும் ஒருவர், காம உணர்ச்சியின் பலனைக் கேடு விளைந்து விட்டதைப்போல் கனவு கண்டால், அவருடைய மனம் காம உணர்ச்சியில் ஈடுபட நினைக்கிறது என்று பொருள். அப்போது காதல் விஷயத்தில் கொஞ்சம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.

திறந்த வெளியில் தன்னந் தனியாக தவிப்பதைப்போல் கனவு கண்டாலும், இருட்டு அறையில் அடைக்கப்பட்டதைப் போலவோ, வழி தெரியாமல் தவிப்பதைப் போலவோ கனவு கண்டாலும் மற்றவர்களிடமிருந்து நமக்கு வேண்டிய அன்பும் ஆதரவும் கிடைக்கவில்லை என்ற ஏக்கத்தின் காரணம். அப்போது மற்றவர்களிடமிருந்து அன்பையும் ஆதரவையும் பெற கையுடன் நடந்து கொள்ளவேண்டும். விட்டுக் கொடுக்கவேண்டும். அச்சத்தைப் போக்கி நம்பிக்கையை வளர்க்க வேண்டும்.



தூய்மை பெற

கலைச்செல்வி

மணிமேகலை

'நமச்சிவாய வாழ்க
நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும்
என்நெஞ்சில்
நீங்காதான்
தாள் வாழ்க'

—திருவாசகம்

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது பெரியோா வாக்கு. திருப்புகழும் தேவாரமும் திருவாசகமும் திருவருட்பாவும் சைவப் பெரியோர்களால் நமது பிள்ளைகள் படிக்கும் பள்ளிகளில் சொல்லித்தரப்படுகின்றன. சிறு குழந்தைகளுக்கு ஆரம்ப முதலே இம்மாதிரியான பாடல்களைச் சொல்லிக் கொடுத்து மனப்பாடம் செய்யும் சக்தியை அதிகரித்தால் அவர்கள் ஆயுள் முழுவதும் நல்லவர்களாயும் அதே நேரத்தில் வல்லவர்களாயும் விளங்குவார்கள்.

சாதாரணமாக, திருப்புகழை எடுத்துக் கொள்வோம். அதிலுள்ள தமிழ்ச்சொற்கள், புலவர்களுக்கும் வித்வான்களுக்குமே புரியக் கூடிய சொற்கள். அதையே நமது கிருபானந்தவாரியார் கதையாக, பாட்டாக, வேடிக்கையாக, விளையாட்டாக, வரிவாகச் சொல்லிக் காலட்சேபம் நிகழ்த்தும் போது நம்மையுமறியாமல் மெய்ம்மறந்துகேட்கிறோம். கரம் குவிக்கிறோம். வணங்குகிறோம். நமது மனமும் பண்படுகிறது.

சமீபத்தில் காரைக்குடியில் இருந்து சகோதரி ஒருவர் எனக்குக்கடிதம் எழுதி, தாங்கள் நடத்தும் சன்மார்க்க சங்கத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். பள்ளி நாட்களில் மேடைப் பிரசங்கம் செய்திருக்கும் நான், இதற்கு, பதிலே எழுதவில்லை. கூட்டங்களில் பேசும் திறன் இல்லாததே காரணம். சொல்பவர்கள் செய்வதில்லை. செய்பவர்கள் சொல்வதில்லை. இதையே கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர் என்று பெரியோர் கூறியிருக்கிறார்கள்.

எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற தோரணையில் இப்போது பேச்சுக்களும் கண்டனங்களும் கூட்டங்களும் எதிர்ப்புக்களும் சர்வசகஜமாக நிகழ்வதை நாம் பார்க்கிறோம். எது எப்படி இருப்பினும் வளரும் பெண்கள் பிள்ளைகள் 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்பதை மறக்கக் கூடாது. 'கந்தை சொல் மிக்க மந்திரமில்லை' 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' என்ற முதியவர்கள் வாக்கை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும். கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசான் தெய்வத்திற்கு சமானம் ஆவார். சமீபத்தில் நான் எழுதிய ஒரு கட்டுரை

யில் படிக்காத பிள்ளைகள் பெற்றவர்களின் வெறுப்புக்கும் மற்றவர்களின் கேலிக்கும் ஆளாகின்றனர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். 'பெற்ற தந்தை தாய் இருந்தால் உமக்கிந்த தாழ்வெல்லாம் வருமோ ஐயா' என்று பெரியவர் ஒருவர் பகவானைப் பார்த்துப் பாடியிருக்கிறார் தாய், தந்தையர் இருக்கும் வரையில் பிள்ளைகளுக்கு ஒரு தாழ்வும் வராமல் கவனித்துக் கொள்வார்கள் என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது. குருவை மதிக்க வேண்டியது பிள்ளைகளது தலையாய கடமை என்பதைப் பெற்றவர்கள்தாம் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

அன்பே தெய்வம் என்று அடிக்கடி சொல்லியே அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

தந்தை குடும்ப நலனுக்காகப் பொருள் தேடும் பொருட்டு ஓய்வின்றி உழைப்பதால் தாயின் கடமையே. பிள்ளைகளைத் தூயவர்களாக்குவது!

நெறியல்லா நெறிதன்னை
நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே
திரு'வருளே' சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லாத
கூத்தன் தன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம்'அருளிய'வாறு
ஆர் பெறுவார் அச்சோவே!

—தேவாரம்



நமது சக்தி



ஒரு சிறிய பரிசோதனைதனை நாம் செய்து பார்க்க வேண்டும். ஒரு நிமிடம் ஜன்னல் வழியாக நாம் வெளியே பார்க்க வேண்டும். மிகச் சரியாக ஒரு நிமிடம் கழித்து வெளியே பார்ப்பதை நிறுத்திவிட்டுத் திரும்பி வந்து உள்ளே உட்கார்ந்து, இந்த ஒரு நிமிடத்தில் நாம் என்னென்ன பொருள்களைக் கண்டோம், யார் யாரைப் பார்த்தோம், என்னென்ன ஒலிகளைக் கேட்டோம் என்று ஒரு காகிதத்தில் குறிப்புக்களை எழுத வேண்டும். உணரும் சக்தி நமக்கு எவ்வளவு குறைவு என்பது தெரியும்!

கொஞ்ச நேரத்துக்கு முன் பார்த்தவைகளை, விட்டு விட்டிருப்போம்! மறந்து விட்டிருப்போம்! இது எல்லாருக்கும் இப்படித்தான். எதிரில் பார்ப்பவைகளையும், கேட்பவைகளையும் உணரும் சக்தியை நாம் வளர்த்துக் கொள்ளவில்லை!

இனியாவது நாம் நமது உணரும் சக்தியை வளர்க்க வேண்டும். இதற்கு முதலில் நாம் நம்மிடம் எந்தவிதக் குறைகளும் இல்லை என்பதை உணர வேண்டும். நமது பார்வை நன்றாக இருக்கிறது. காதுகள் சரியாகக் கேட்கின்றன. தொட்டால் நாம் தொடும் பொருள் எப்படிப் பட்டது என்று உணர முடிகிறது. நாக்குக்குச் சுவை தெரிகிறது. மூக்கினால் எப்படிப்பட்ட வாசனையையும் உணரமுடிகிறது. இவைகளை நாம் மிகச் சரியாகப் பயன்படுத்துவதில்லை. அவ்வளவுதான்!

கண்களைக் கொஞ்ச நேரம் மூடிக்கொண்டு 'நமக்குக் கண் பார்வை போய் விட்டால் எப்படி இருக்கும்?' என்று சிந்தித்துப் பாருங்கள். கண்களின் அருமை புரியும். காதுகளை மூடிக்கொண்டு, 'காது கேட்கா விட்டால், எப்படி இருக்கும்?' என்று எண்ணிப் பாருங்கள். கேட்கும் சக்தியின் அருமை புரியும். நாக்குக்கு உணரும் சக்தி இல்லாவிட்டால் எப்படி இருக்கும், நாக்குக்கு ருசி தெரியாவிட்டால் எப்படி இருக்கும், மூக்கு வாசனை பிடிக்கும் சக்தியை இழந்து விட்டால் எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தால், இவைகளை இனியாவது நன்றாகப் பயன்படுத்துவோம், நமது உணரும் சக்தியை வளர்ப்போம் என்கின்ற எண்ணம் நமக்கு அதிகமாக வரும்! இதனால் ஆற்றல் வளரும்!

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை
யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை
போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை
ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி
போற்றுகின் றேனே.

ஒன் றுகண் டீர்உல
குக்கொரு தெய்வம்
ஒன் றுகண் டீர்உல
குக்குயிர் ஆவது
நன் றுகண் டீர்இனி
நமசிவா யப்பம்
இன் றுகண் டேற்கிது
தித்தித்த வாறே.

—திருமந்திரம்

Space Donated by

தி இந்தோ ஸ்விஸ் சிந்தடிக் ஜெம்

மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,

மெயின் ரோடு, மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா

சமாதானப் புறாவின் மறைவு

எம். முகம்மது அஷ்ராப்

''பதினேழு ஆண்டுகளாக மனதை அரித்துக் குத்திக்கொண்டும், வாட்டிக்கொண்டும் தீராத நோயாக இருக்கும் காஷ்மீர் பிரச்சினை தீரும். அதனல் இந்தியாவின் எதிர்காலம் ஒளிமயமாக அமையும், போர் மேகங்கள் மறைந்து அமைதி ஞாயிறுஎழும், இந்தியா — பாகிஸ்தான் வேற்றுமை உணர்வு பகையுணர்ச்சி எல்லாம் ஒடுங்கி அமைதி நிலவும்'' இவ்விதமெல்லாம், பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி தாஷ்கண்ட் சென்றதினல் எண்ணி இன்ப வானிலே ஆனந்தச் சிறகடித்துப் பறந்தோம். ஆனல், வெற்றி ஓலை வருமுன் சாவோலை முந்திக்கொண்டது! பன்னீர் தெளித்து ஆவலுடன் வரவேற்க வந்த நம்மைக் கண்ணீர் வடிக்கச் செய்து மறைந்துவிட்டார்! சாகுமளவும் நம்மைவிட்டு, நம் மனதைவிட்டு அகலாத தீராப் பெரும் புண்ணை உண்டாக்கிவிட்டார். சாஸ்திரி அவர்கள் தாஷ்கண்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. தனது உயிரையே முத்திரையாகப் பதித்துவிட்டார். ''இறப்பு எவரையும் விடாது, அறிவித்துக்கொண்டும் வராது'' என்ற பொன்மொழி மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது!

இவ்வாறு நாட்டின் கண்ணியத்தைக் காத்த நமது நல்ல தலைமை அமைச்சர் உயர்திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் 1904-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி மொகல்பராவில் பிறந்தார். தனது இரண்டு வயதில் தந்தையை இழந்தார். எனவே இவர் தன் இரு சகோதரர்களுடன் தன் பாட்டனர் இல்லத்தில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. தமது 12-ம் வயதில் காங்கிரஸ் தலைவர் நரேந்திர தேவைச் சந்தித்தார். இச்சந்திப்பின் பயனகக் காந்தியடிகளுடன் சாஸ்திரி தொடர்பு கொண்டார். பின்பு இவர் காந்தியடிகளுடன் நாட்டின் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டார். சாஸ்திரி தனது 22-வது வயதில் காசி சர்வகலாசாலையில் பட்டம் பெற்ருர். தமது 24-வது வயதில் லலிதா சாஸ்திரி என்னும் பெண்மணியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார்.

லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் முதலில் அலகாபாத் நகரசபை மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952-ல் டெல்லி மேல்சபை உறுப்பினராகிப் போக்குவரத்து மந்திரி ஆனர். அதன்பின், வர்த்தக மந்திரியானர். உள்துறை மந்திரியாக இருந்த திரு கே. சி. பந்த் மரணம் அடைந்ததும், இவர் உள்துறை மந்திரியானர். பின் நம் நாட்டின் முடிசூடா மன்னர் உயர்திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் மறைந்ததும் இவர் நமது தலைமை அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேருவின் வாரிசாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பாகிஸ்தான் தகராறு. இநதிக்கலவரம், உணவுப் பஞ்சம், பொருளாதார நெருக்கடி ஆகியவை தலைவிரித்தாடிய பொழுதும் இவற்றை மிகத் திறமையாகச் சமாளித்தவர் என்ருல் மிகையாகாது.

''உருவுகண் டெள்ளாமை
வேண்டும்உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து.''

என்ற பொய்யாமொழிக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டாக விளங்கிஞர் சாஸ்திரி. அவர் விரும்பி ஏற்றுக்கொண்டவை அன்பும், எளிமையும். வெறுத்து ஒதுக்கியவை பணம், வீண் ஆணவம், கர்வம் முதலியன.

திரு. சாஸ்திரியின் மறைவு நமக்கெல்லாம் பெருந் துக்கத்தைத் தரக்கூடியதுதான். பொங்கும் துக்கத்தைப் பொறுத்து, பொழியும் கண்ணீரைத் துடைத்து அமைதி பெறுவோம். அவர் நடந்த தூய்மையான வழியிலேயே நாமும் நடக்க உறுதி பூணுவோம். அவ்வுறுதியினுல், சந்தனக் கட்டையினிடையே எரிக்கப்பட்ட அவரது ஆத்மா சாந்தியடையட்டும்!

முடிவு

'மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் ஒழுங்காகக் கற்றுக்கொள்ளாவிடில், அவர்களுடைய படிப்புக்காகப் பணத்தைச் செலவிடுவது நாட்டிற்குப் பெரும் நஷ்டம்'

—மகாத்மா காந்தி

—நாச்சிமுத்து பாலிடெக்னிக் பொள்ளாச்சி 67 ஆண்டு மலரில் இருந்து.

திருச்சிற்றம்பலம்

பொடிக்கனகத் திருமேனித் திருமணங்கற் பூரப்
பொடி மணத்தோ டகம்புறமும் புதுமணஞ்செய் யமுதே
அடிக்கனக வம்பலத்தே திருச்சிற்றம் பலத்தே
ஆடல்புரி யரசேயென் அலங்கலணிந் தருளே.

—திருஅருட்பா

மணமும் பொற்குணமும் கொண்ட பொடி

REGISTERED TRADE MARK

T. A. S.

ரத்தினம் பட்டணம் பொடி

தபால் பெட்டி எண், 1151, மதராஸ்-21

மகரிஷி மகேஷ் யோகி



மகரிஷி மகேஷ் யோகியின் பெயர் அடிபடாத பத்திரிகைகள் இன்று இல்லை. அந்த அளவுக்கு அவர் இன்று உலகத்தைக் கவர்ந்து விட்டார். இரயில் விபத்துக்களும், பூகம்பங்களால் ஏற்படும் கஷ்டங்களும், அணுகுண்டுகளும், புதுப்புது நோய்களினால் ஏற்படும் ஆபத்துக்களும் நிறைந்த இந்த உலகத்தில் இப்போது அமைதி இல்லை. மக்கள் எல்லாரும் பீதியுடன் வாழும் காலம் இது. பெரும் பணக்காரர்களுக்கும், மேல் நாட்டு நாகரிகங்களில் ஊறியவர்களுக்கும்கூட மன அமைதி இல்லை. எப்படிப்பட்ட வாழ்க்கையை மேற்கொண்டவர்களுக்கும் சுலபமான நியாய முடிவுகளால் அமைதியைத் தர முடியும் என்று சொல்லி, ரிஷிகேஷில் உள்ள தனது ஆசிரமத்தில் பயிற்சி அளித்து ஏகப்பட்ட பணக்காரர்களுக்கும்கூட, வெளி நாட்டவர்களுக்கும்கூட அமைதியை உண்டாக்கியிருக்கிறார் மகரிஷி. இது இவருக்குப் பெரும் வெற்றியையும், புகழையும், பணத்தையும் கொடுத்திருக்கிறது.


மகரிஷி மகேஷ் யோகிக்கு அந்நியச் செலாவணியாகப் பல இலட்சம் ரூபாய் கிடைத்து வருகிறது. ஆத்மீக வழிகளை வளர்க்க இந்தப் பணத்தை பெரிதும் பயன்படுத்தி வருகிறார் மகரிஷி.

மகரிஷி அரசியலிலும், அரசாங்க அலுவலகங்களிலும், பொதுவாக நாட்டிலும் உள்ள ஊழல்கள் நல்ல முறையில் உபதேசம் செய்து ஒழிக்க முடியும் என்று இப்போது அதற்காகப் பெரிதும் பாடுபட்டு வருகிறார்.

மனிதர்களின் வாழ்க்கை முறை எப்படி இருந்தாலும், நாகரிகக் கொள்கைகள், உடுத்தும் உடைகள், உண்ணும் உணவு எப்படி இருந்தாலும் அவைகளைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் மனிதர்களின் மனத்தை மட்டும் சுத்தம் செய்து, மனித குலத்துக்கு அமைதியைத் தர முயற்சி செய்து வரும் மகரிஷியைப் பாராட்டாமல் இருக்க முடியாது!

மகரிஷியின் செயல்களும், மகரிஷியின் தெளிவான கருத்துக்களும் பொது மக்களை மிகவும் கவர்ந்து விட்டன! உலகத்தையே கவர்ந்துவிட்டன!

வெளியிடுபவரும், ஆசிரியரும் இராம. மணிமேகலை, 4. தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ் 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.


ஆசிரியர்:
திருமதி
தமிழ்வாணன்
மாத இதழ்
விலை 30 காசு
தென்னாட்டில் சிறந்
தெய்விகப்பத்திரிகை

அருள்

தமிழ் மாத முதல் நாள் வெளிவருகிறது

இந்த இதழில்

அருள்-2 ஜூன்

கருணை-9 15-6-68

ஆனி, கீலக விலை: 30 காசு

திருச்சிற்றம்பலம்

ஐய னே! உனை
அன்றி ஒருதெய்வம்
கையி னால்தொழ
வும்கரு தேன்கண்டாய்
பொய்ய னாகிலும்
பொய்யுரை யேன்சுத்த
மெய்ய னாம்உனக்
கேவெளி யாகுமே.
கையி னால்தொழு(து)
ஏத்திக் கசிந்துளம்
மெய்யி னால்உனைக்
காண விரும்பினேன்,
ஐய னேஅர
சேஅரு ளேஅருள்
தையல் ஓர்புறம்
வாழ்சக நாதனே!

Space Donated by

தி இந்தோ ஸ்விஸ் சிந்தடிக் ஜெம்

மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,

மெயின் ரோடு, மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா



அமுத வாக்கு

அருள்மொழி அரசு
திருமுருக
கிருபானந்தவாரியார்

பெரியவர்கள் வாக்கில் அமிர்தம் உண்டு. அதனால் அவர்கள் கூறிய சொல் அமிர்தமாகி அருள் புரியும். ''மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்'' என்பது பழமொழி. இந்த வாக்கில்தான் எத்தனை ஆழம்! இதனை விளக்குவது இது.

புல் குடிசை; தெற்குப் பார்த்திருந்தது. தோட்டத்தில் வாழைகளும் இரண்டு தென்னைகளும் ஒற்றுமையாக நின்றிருந்தன. தரை மட்டத்தில் ஒரு சிறு கிணறு. அதன் அருகில் கரிய பானைகள் கவிழ்த்திருந்தன. தோட்டத்தில் பனை மட்டைகள் வேலியாக நின்று போர் வீரர்களைப்போல் அந்தக் குடிசைக்கு அரண் செய்தன.

அந்தக் குடிசையில் எலிக்குஞ்சுகளும் வறுமையுடன் வாழ்ந்தன. தெருப்பக்கம் ஒரு சன்னல். இதில் ஒரு கதவு பாதி நைந்து ஒடிந்திருந்தது. அந்த வீட்டின் பழமைக்கு அது சான்று இதழ்போல் காட்சியளித்தது.

முத்துசாமி என்பவன் அந்தச் சன்னல் ஓரத்தில் உட்கார்ந்து நெசவுவேலை செய்து கொண்டிருப்பான். வறுமையின் சிறுமையால் அதிகாலையிலேயே தன் வேலையைத் தொடங்குவான். பகல் பன்னிரண்டு மணிக்குத் தறியை விட்டு இறங்கி வந்து, கேழ்வரகுக் கூழ் குடிப்பான். அதற்கு ஊறுகாய்கூடக் கிடையாது. உலர்ந்த மிளகாய் வற்றலைக் கிள்ளி, அதில் இரு உப்புக்கல்லை வைத்து வாயில் போட்டு மெல்லுவான். கண்ணில் நீர் துளிர்க்கும். அந்தக் காரத்தில் அந்த ஆகாரம் மட மட வென்று வயிற்றுக்குள் நுழைந்துவிடும்!

கையலம்பிக் கொண்டு அந்த ஈரம் உலர்வதற்குள் தறிக்குள் சென்று நெய்வான். நன்றாக இருட்டிய பின்தான் அதைவிட்டு வருவான்.

ஊர்க்கோடியில் உள்ள ஏரிக் கரையில் சரீர உபாதையை நீக்கி விட்டு வருகின்ற வழியில் பிள்ளையாரைக் கும்பிட்டு வந்து, மனைவி கொடுத்த உணவைத் தேவாமிர்தமாகச் சாப்பிட்டுவிட்டு அயர்ந்து படுத்து விடுவான்.

இப்படி அன்றாடம் அவன் உழைப்பான். அப்படி உழைத்தும் அரை வயிறுதான். இந்தத் தரித்திர நிலையில் அவனுக்கு மூன்று பெண் குழந்தைகளும் நாலு ஆண் குழந்தைகளும் பிறந்தன.

அந்த ஊரில் அவர்களின் குலகுரு வந்து எல்லோருக்கும் தீட்சை கொடுத்து உபதேசம் செய்தார்.

முத்துசாமி மட்டும் அதில் கலந்து கொள்ளவில்லை. அவனுண்டு, அவனுடைய வேலையுண்டு என்று இருந்தான்.

அவனுடைய மனைவி வந்தாள். ''நம்ம குரு மகான் வந்து எல்லோருக்கும் உபதேசம் செய்து வைக்கிறார். நீங்களும் போய்ச் செய்து கொள்ளுங்களேன். இந்தச் சந்தர்ப்பம் போனால் நமக்கு வேறு சந்தர்ப்பம் கிடைக்காது'' என்று சொன்னாள்.

''போடி! நம்ம பிழைப்பு எட்டிப் பார்த்தால் எட்டிழை குறையும். உண்டானவனுக்குத்தான் தீட்சையும் தெய்வமும். வறுமைப்பேய் நம்ம வீட்டில் வாசம் புரிகிறதே. தீட்சை வாங்கிக் கொண்டால் பக்தி சிரத்தையாக இருந்து அரை மணி நேரமாகிலும் அநுஷ்டானம் செய்யவேணும். எனக்கு நேரம் ஏது?''

''ஐந்து நிமிஷ நேரமாவது சுவாமியை நினைக்க வேண்டாமா? பல் விளக்க நேரம் இருக்கிறது. உறங்கவும் நேரம் இருக்கிறது. இதில் ஐந்து நிமிஷம் அநுஷ்டானம் பண்ண மட்டும் நேரம் இல்லை என்றால், இது பொருந்துமா? மனம் இருந்தால் நேரமும் இருக்கும்!''

இவ்வாறு மனைவி சொன்னதைக் கேட்ட முத்துசாமி, சரி என்று தறியை விட்டு இறங்கி, மேல் துண்டை எடுத்துக் கொண்டு நேரே குருநாதர் உள்ள இடத்திற்குச் சென்றான். அவரை வீழ்ந்து வணங்கினான்.

''முத்துசாமி; சுகமாக இரு! எங்கே, இந்தப் பக்கம் எட்டிக் கூடப் பார்க்கவில்லையே? அயலூருக்குப் போயிருந்தாயோ?'' என்று கேட்டார் குருநாதர்.

''சுவாமி! அடியேனுக்கு அதிக வேலை. தீட்சை வாங்கிக்கொண்டால் தினம் குளிக்கவேணும். அநுஷ்டானம் செய்யவேணும். வெகு கிரமமான வேலை. அடியேன் ஏழை. நெசவு ஜீவனம். எனக்குத் தக்கவாறு சுருக்கமாக உபதேசம் செய்து வைக்க வேணும்''

''அப்பா! முத்துசாமீ! எழுந்தவுடன் தந்த சுத்தி செய்து முகத்தில் திருநீறு இட்டுக்கொண்டு பத்து முறை பஞ்சாட்சரம் சொல்லிவிட்டு அப்புறம் உணவைச் சாப்பிடு. இதுபோதும். உனக்கு நல்லருள் கிடைக்கும்''

''சுவாமி! இதை விடவும் சுலபமான உபதேசம் கிடையாதா?'' என்று கேட்டான் முத்துசாமி.

குருநாதர் புன்னகை புரிந்தார். ''அந்தோ! பஞ்சாட்சரம் பத்து முறை கூறக்கூட நேரம் இல்லையாம்! இது என்ன உலகம்!''

''அப்பா! திருநீறு பூசிய திருமுகத்தைப் பார்த்த பிறகுதான் ஆகாரம் சாப்பிடுவது என்று ஒரு கொள்கையையாவது வைத்துக்கொள்'' என்று அருளினார் குருநாதர்.

இதற்கு முத்துசாமி இணங்கினான். ஏன்? அவனுடைய பக்கத்து வீடு ஒரு குயவனுடையது. அந்தக் குயவனார், திருநீலகண்டரைப் போன்ற பரமசிவ பக்தர். நெற்றியில் எப்போதும் வெண்ணீறு தரித்துக்கொண்டிருப்பார். அவர் யாசகப் பொடி வாங்க அடிக்கடி இவனுடைய சன்னல் பக்கம் வருவார். அதனால்தான் முத்துசாமி குருநாதரிடம் இந்தக் 'கடின'மான ஒரு நிபந்தனைக்கு உட்பட்டான்.

இதன்படியே இவன் தறியில் இருந்து நெய்யும்போது அந்தக் குயவனார் சன்னல் பக்கம் வந்து பொடி கேட்பார். திருநீறு பூசிய அவருடைய முகத்தைப் பார்த்தவுடனே மனைவியைக் கூப்பிட்டுக் கூழ் கரைக்கச் சொல்லி, தறியில் இருந்தபடியே சாப்பிட்டு விடுவான். நெசவு வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்து பஞ்சு படாத பாடுபட்டு அந்தக் குடும்பத்தை அவன் பாதுகாத்து வந்தான்.

ஒருநாள் குயவனாருக்கு வீதியில் ஓர் அணா கிடைத்தது. அதற்கு அவர் பொடி வாங்கிக் கொண்டார். அதனால் அவர் இவனிடம் பொடி வாங்க வரவில்லை.

இவன் துடியாய்த் துடித்தான். கடும் பசி காதை அடைக்கின்றது. பகல் மணி பன்னிரண்டு, உச்சிவேளை. மனைவி மேல் சீறி விழுந்தான். ''உபதேசம் செய்து கொள்ளச் சொல்லி என்னைச் செல்லரித்தாள். அந்தக் குயவன் இன்று எங்கே செத்தானோ? வந்து தொலையவில்லை. வயிறு கிள்ளுகின்றது. என்ன செய்வேன்?'' என்று கூறி அங்கலாய்த்துக் கொண்டான்.

''போய் அவர் வீட்டில்தான் பார்த்துவிட்டு வாருங்களேன்'' என்றாள் மனைவி.

''சரி'' என்று நாடாவைத் தறிமேல் வைத்து விட்டு எழுந்து ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு, அடுத்த வீட்டுக்கு ஓடினான். அந்த வேளை குயவனார் களிமண் எடுக்கும் பொருட்டு ஏரிக்குச் சென்றிருந்தார். முத்துசாமிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. ''பாவிப்பயல்! இந்நேரம் பார்த்துப் போகவேணுமா? வேறு வழியில்லை'' என்று கூறிவிட்டு ஒரே ஓட்டமாக ஏரிக்கரைக்கே ஓடினான்.

அங்கே ஒரு பெரிய பள்ளம். அதில் குயவனார் மண்வெட்டி எடுக்கும்போது இரண்டு தங்கக் குடங்கள் இருந்தன. 'கணீர்' என்ற ஒலியுண்டாயிற்று. யாராவது பார்த்துவிட்டால் துன்பமாயிற்றே என்று மேலே நிமிர்ந்து பார்த்தார்.

முத்துசாமி அந்த நேரத்தில் ''பார்த்துவிட்டேன்'' என்று கூறிவிட்டுப் பிடித்தான் ஓட்டம்! ஆனால், அவன் தங்கக் குடத்தைப் பார்க்கவில்லை! விபூதி முகத்தைத்தான் பார்த்தான்! வீட்டையடைந்து கூழ் குடித்துவிட்டுத் தறிக்குள் நுழைந்து கொண்டான்.

குயவனூர் பதைத்துப்போனார்! இவன் ஓடி மணியக்காரருக்கோ, கணக்குப் பிள்ளைக்கோ சொல்லிவிட்டால் அரசாங்கம் இதனைப் பறிமுதல் செய்யுமே? கடவுளே! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகுமே!'' என்று அஞ்சினார்.

இரு தங்கக் குடங்களையும் வண்டியில் வைத்து மேலே வைக்கோலை மூடி, வேகமாக வண்டியை ஓட்டிக் கொண்டு வீட்டிற்குள் கொணர்ந்து மறைத்து வைத்தார்.

முத்துசாமியின் மனைவியைக் கூப்பிட்டு, ''அம்மா! ஏரியில் மண் எடுக்கும்போது இரு தங்கக் குடங்கள் கிடைத்தன! உன் கணவன் பார்த்துவிட்டு 'பார்த்துவிட்டேன்!' என்று சொல்லிவிட்டு ஓடினான். அரசாங்க அதிகாரிகளிடம் சொல்லத்தான் ஓடினானோ, என்னவோ? நீயும் ஏழை, நானும் ஏழை. ஆளுக்கு ஒரு குடம் எடுத்துக் கொள்வோம். உன் கணவனிடம் சொல்லி இதை வெளிப்படுத்த வேண்டாம்என்று சொல். இந்தா ஒரு குடம், நீ கொண்டுபோ''என்று கொடுத்துவிட்டார்!

பழம் புடைவையால் மூடி, அவள் அதனைப் புழைக்கடை வழியாகக் கொணர்ந்து சமையல் அறைக்குள் வைத்தாள். கணவனிடம் வந்தாள்.

''நீங்கள் ஏரிக்குப் போனீர்களே! என்ன பார்த்தீர்கள்?''

''உன் தலை! உன்னால்தான் இந்தச் சங்கடம்! குயவனுடைய திருநீற்றைத்தான் பார்த்தேன்'' கணவனை அழைத்துக் கொண்டுபோய், தங்கக் குடத்தைக் காட்டினாள். அதன் மூடியைத் திறந்தவுடன் அதில் மஞ்சளாக ஆயிரம் தங்க டாலர்கள் இருந்தன!

''பார்த்தீர்களா! வெறும் திருநீறு பூசிய திருமுகத்தைப் பார்த்த ஒரு நன்மையின் காரணமாக இந்த நலம் எய்தியது. நீங்களே திருநீறுபூசி வழி பாடு செய்தால் இகபர நலன்கள் எய்துமே! 'நீறில்லா நெற்றி பாழ்' என்கின்றார் ஔவையார். ஆதலால் சைவர்கள் திருநீறும், வைணவர்கள் திருநாமமும் இட்டுக்கொள்ள வேணும். நெற்றிக்கு இட்டுக் கொள்வதனால் எத்தனையோ நலன்கள் எய்தும். இது நம் பாரத நாட்டுப்பண்பு. ஆன்றோர் அமுதவாக்கு'' என்றாள்.

அன்று முதல் முத்துசாமி முறையே ஆசார அநுஷ்டானங்களை மேற்கொண்டு திருநீறு பூசித் தெய்வமணம் கமழச் சிறந்து விளங்கினான்!

வாழ்வாவது மாயம்!

கலைச்செல்வி மணிமேகலை

''மாசில் வீணையும் மாலை
மதியமும்
வீசு தென்றலும் வீங்கின
வேனிலும்
மூசு வண்டறைப்
பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி
நிழலே''

6 வருடங்களுக்கு முன் மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி என்ன சொன்னார்? 'நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே! நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்று உன்னைக்கேட்டுக்கொள்' என்றார். உங்கள் மனச்சாட்சியை நீங்கள் கேட்டுப் பாருங்கள். மனச்சாட்சிக்கு மேலான ஒரு கோர்ட் இந்த உலகத்தில் இல்லை. அமெரிக்காவில் வாழ்ந்து வரும் கென்னடி குடும்பம் பெரும் பணக்காரக் குடும்பங்களில் ஒன்று. 7 பிள்ளைகளைப் பெற்ற தகப்பனார் கென்னடி, பக்கவாத நோயின் காரணமாக வாய் பேச முடியாதநிலையில் இருக்கிறார். ஜனாதிபதி கென்னடி குறைந்த வயது உள்ளவராக இருந்தாலும் நிறைந்த வாழ்வு வாழ்ந்துவிட்டு நம்மைவிட்டு மறைந்துவிட்டார். அவருடைய தம்பி ராபர்ட் கென்னடி தேர்தலில் நின்று வெற்றி பெற்று வருவார் என்று எல்லாராலும் நினைக்கப்பெற்ற நேரத்தில் நிறவெறி பிடித்த ஓர் அரபு நாட்டு அயோக்கியன் ஒருவனால் கொல்லப்பட்டார். சரித்திரப் புகழ் பெற்றார். அவருடைய பெற்றோருக்கும் மனைவிக்கும் அவரது 11 மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்!

மக்கள் செம்மறி ஆட்டு மந்தைகள் அல்லர். இதயம் படைத்தவர்கள். ஓட்டு மூலம் வெற்றி பெற்றவர்கள் ஏழை மக்களின் கண்ணீரைத் துடைக்கத் தவறுவார்களேயானால், ஏழை மக்கள் பசிப்பிணியைப் போக்கத் தவறுவார்களேயானால் நமது ஓட்டு வீணாகி விட்டதே என்ற ஆத்திரத்தில் என்ன செய்வார்கள் என்று நம்மால் வரையறுத்துச் சொல்ல முடியாது!

'தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்றார் பாரதியார். அண்ணல் மகாத்மா காந்தி சென்னைக் கடற்கரையில் சிலையாக இருக்கிறார் என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அரசியல்வாதிகள் தப்புக் கணக்குப் போடக்கூடாது. கோடிக்கணக்கான ஏழை மக்களின் மனதில் இடம் பிடித்த அண்ணல் காந்தியின் நினைவு அவர்களைத் தட்டி எழுப்பிவிடும். 'தூங்காதேதமிழா' என்ற பாடல் அவர்களை உற்சாகப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அசாத்தியமான துணிச்சலையும் கொடுத்துவிடும்.

பண்டித ஜவஹர்லால் நேருவின் நினைவு பாமர மக்களை வீட்டுக்கொரு வீரனைத் தயார் செய்யச் சொல்லும்!

அலங்கார மேடைகளில் பேசப்படும் அடுக்கு மொழி வசனங்களில் மனதைப் பறிகொடுத்த மக்கள் கூட்டம் தாங்கள்போகும் திசையை மாற்றினால் சரித்திரம் மாறிவிடும்.

'அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே' என்று பாடினார் பாரதியார். ஏழை மக்கள் செயலில் இறங்கி விடுவார்கள். 'வாழ்வாவது மாயம். அது மண்ணாவது திண்ணம்' என்ற உணர்வு இதைப் படிக்கும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஏற்படவேண்டும்.

வாழ்க நீ எம்மான் இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி .
மகாத்மா! நீ வாழ்க!வாழ்க!!

—மகாகவி பாரதியார்

கலியாண கால

விசேஷ விற்பனை



பட்டுச் சேலைகள்
சோளி பீஸ்கள்

பற்றும் நூல் சேலைகள் &
மில் ஜவுளி ரகங்களும்
கிடைக்கும்.

நல்லி டெக்ஸ்டைல்ஸ்

பாண்டி பஜார்
தி.நகர் - சென்னை-17

போன் :
442567

சிகாகோ சொற்பொழிவு

''அமெரிக்கா நாட்டுச்
சகோதரிகளே!
சகோதரர்களே!

அன்பினோடும் ஆர்வத்தினோடும் நீங்கள் அளித்த வாழ்த்துரைக்கு மறுமொழி கூற யான் எழுந்து நிற்கும் இச்செயலானது சொல்லுதற்கரிய உவகையினாலே எனது உள்ளத்தை நிறைவுறச் செய்கிறது. உலகிலுள்ள துறவொழுக்க நிலையங்களிலே முழு மிகு பழமை வாய்ந்த நிலையத்தின் பெயரால் நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்; பல்வேறு வகுப்பினராய்ப் பல பிரிவாகிய மதங்களைக் கைக்கொண்டொழுகுங் கோடிக் கணக்கான இந்திய மக்களின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

இந்த மேடையின் மீதுள்ள உரையாளருட் சிலர், கிழக்கு நாட்டிலிருந்து வந்த பிரதிநிதிகளைக் குறித்துப் பேசும்பொழுது, ''தொலையிலுள்ள மக்கட் கூட்டத்தினிடையே யிருந்து வந்த இப் பிரதிநிதிகள் பண்புடைமையாகிய எண்ணத்தினை எல்லா நாட்டிற்கும் கொண்டு செல்கின்ற பெருமைக்கு உரிமை உடையவர்கள்'' எனக் கூறினர்,



சுவாமி விவேகானந்தர்

அதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். (பிறருடைய கொள்கையை வெறுத்தொதுக்காத) பண்புடைமை (அக்கொள்கைகளை ஏற்றுக் கொள்கின்ற) பொது நோக்கு என்னுமிரண்டினையும் உலகிற்குக் கற்பித்த சமயத்துக்கு நான் உரியவனெனப் பெருமைப்படுகின்றேன்! எல்லாச் சமயங்களையும் அன்பினோடு நோக்குகின்ற பண்புடைமையில் எங்களுக்கு நம்பிக்கையுண்டு. அதுமாத்திரம் அன்று; எல்லாச் சமயங்களையும் உண்மை நெறிகளென நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். உலகத்திலுள்ள எல்லாச்சாதியாராலும் மதங்களாலும் துன்புறுத்தி ஒதுக்கப்பட்ட மக்களுக்கு அடைக்கலந் தந்து காப்பாற்றிய ஒரு சாதிக்கு நான் உரியவன் என்பதைக் குறித்துப் பெருமை அடைகின்றேன்! உரோமருடைய கொடுஞ் செயலினாலே தமது பரிசுத்த தேவாலயம் சின்ன பின்னப்பட்ட ஆண்டிலே தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் அடைக்கலம் புகுந்த கலப்பில்லாத இஸ்ரவேல் சாதியாரில் எஞ்சியிருந்தவர்களை நாங்கள் அன்பினோடு அணைத்துக் கொண்டோம் என்பதனை உங்களுக்கு எடுத்துச் சொல்லும் பெருமை எனக்கு உண்டு. பெருஞ் சிறப்பு வாய்ந்த சொராஸ்திரிய சாதியாரிலே எஞ்சியிருந்தோருக்குப் புகலிடம் கொடுத்து இன்றும் பாதுகாத்து வருகிற ஒரு சமயத்தைச் சார்ந்தவன் நான் எனப் பெருமைப்படுகின்றேன்! என் அன்புள்ள சகோதரர்களே, இளமையிலேயே நான் பல பல முறை ஓதியதும், இன்னும் கோடிக் கணக்கான மானிடர்களாலே ஓதப்படுவதுமாகிய ஒரு கீதத்தில் இருந்து சில அடிகளை எடுத்து உங்கள் முன்னிலையில் மொழிவேன்.

''எண்ணுமிரு நிலத்தெழுந்த
பலநதியும்
இறுதியிவந் தெறிநீர் வேலை
நண்ணுகின்ற இயல்பது
போற் பல்வேறு
தகைமை யராய் ஞான
நாடும்
மண்ணகத்தோர் செல்லு
நெறி செம்மையதாய்க்
கோடலை யாய்மருவு மேனும்
புண்ணியனே நினையடையூ
மார்க்கமவை
யளைத்து மெனப் புகல்வன்
யானே''

இதுவரை ஒரு காலத்திலும் ஏற்படாத மிகவும் பெருமை பொருந்திய சர்வசமய ஆராய்ச்சிக் கழகமாகிய இம் மாபெரு மன்றமானது கீதையிலே கூறப்பட்டிருக்கும் ஒரு பெரிய அற்புதமான உண்மையைத் தெளிவு படுத்தி வற்புறுத்துகின்றது.

''மெய்வகை யதிதுவென்ன
வேண்டியவர் வேண்டியென
அவ்வகைய தெய்வமுமாய்
அளிப்பேனும் யானேகாண்''


''யாதாயினும் ஒரு பாதையைப் பின்பற்றி என்னை யாவன் நாடுகின்றானோ அவனை யான் அடைகின்றேன். ஈற்றிலே என்னை அடைகின்ற பாதைகளிலே எல்லாமக்களும் முயன்று செல்கிறார்கள்''

''சமய வேறுபாடுகளும் மதச் சண்டைகளும், அவற்றினின்று

ஏற்பட்ட கொடிய பிடிவாதமும் ஆகியவை இந்த அழகிய பூவுலகத்தை நெடிது பற்றியிருந்தன. இந் நிலவுலகத்தை அவை கொடுஞ் செயலினாலே நிறைந்துவிட்டன. மீண்டும் மீண்டும் மானிட உதிரத்தை எங்கும் சொரியச் செய்து, நாகரிக வாழ்க்கையை அழித்து, மக்கட் கூட்டத்தினரை திகைக்கும்படி செய்துவிட்டன. இந்தக் கொடிய பேய்கள் தோன்றாதிருந்தால், மக்கட் கூட்டமானது இப்பொழுது இருக்கின்ற நிலையினும் மிக உயர்ந்த நிலையில் இருந்திருக்கும். குறித்த பேய்கள் அழிந்து போகின்ற காலம் நெருங்கிவிட்டது. இன்று காலையிலே இந்தப் பெருமன்றம் கூடும் பொழுது அடித்த மங்கல மணியானது மூடக் கொள்கைகளின் சாவு மணியாகுக! வாளினாலோ, எழுதுகோலினாலோ, ஒருவரையொருவர் பகைக்கின்ற கொடுஞ் செயலானது அகன்று விடுக! ஒரே நோக்கத்தில் கொண்டு ஒன்றினையே நாடிச் செல்கின்ற மக்களிடையே அன்பினோடு கூடிய எண்ணங்கள் நிறைவு பெறுக!" ○



அறநிலையப் பாதுகாப்பு



முன்னாள் தமிழக
முதல் அமைச்சர்
திரு. எம். பக்தவத்சலம்

மக்களிடையே ஒழுக்க நெறியை வளர்ப்பதற்காக மக்கள் சீரிய வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக ஆலயங்களேயும், அறநிலேயங்களேயும் நம் முன்னேர்கள் அமைத்தார்கள்.

முன்னேர் நோக்கம்

ஏதோ மனிதர்களுக்கு வீடு இல்லேயென்ருல் எங்கேயாவது போய்த் தங்கவேண்டியிருக்குமே, அதைப் போன்று பரமசிவனுக்கு வீடு இல்லே யென்ருல் சுடுகாட்டில் போய் இருக்கவேண்டி வரும் என்றே, அல்லது மகாவிஷ்ணுவுக்கு இடம் இல்லேயென்ருல் திருப்பாற்கடலே நோக்கிப் போக வேண்டியிருக்குமே என்று நினேத்தோ இந்த ஆலயங்களே எல்லாம் நமது முன்னேர்கள் கட்டவில்லே. மக்களுடைய நல் வாழ்க்கைக்காகத்தான் இதையெல்லாம் அமைத்திருக்கிருர்கள். அதற்குரிய அமைப்பில் இந்த ஆலயங்கள் எல்லாம் அமைந்திருப்பதை நாம் பார்க்கிறேம்.

இம்மாதிரி முன்னேர்களால் விடப்பட்டிருக்கிற, அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தர்மஸ்தாபனங்களுடைய நடவடிக்கைகள் எல்லாம் சரியான முறையில் நடக்கும்படியான வழியில் நாம் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கலேயும் வாழ்வும்

பழைய கோயில்களேயெல்லாம் எடுத்துக் கொண்டால் எத்தனேயோ சிறப்புகள் இருக்கின்றன. ஒப்புயர்வற்ற கலேகள் எல்லாம் இருக்கின்றன. அதோடு பல இலக்கியங்களும் வளர்ந்திருக்கின்றன. இதன் மூலமாகவே பல பாமாலேகளும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவ்விதம் நாம் பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடிய பல தமிழ் இலக்கியங்கள்

நமக்குக் கிடைத்திருக்கின்றன. சமஸ்கிருதத்தை எடுத்துக் கொண்டாலும்கூடப் பல இலக்கியங்கள் இந்த முறையிலே கிடைத்திருக்கின்றன என்று சொல்லலாம்.

வெறும் இலக்கியங்கள் மட்டுமல்ல; சிறந்த கலைகள் எல்லாம் வளர்ந்து வந்திருக்கின்றன. கலைகள் இல்லாமல் மக்கள் நல் வாழ்க்கை நடத்த முடியாது. மற்றொன்றையும் நாம் பார்க்க வேண்டும். இசைக்கலை, நாட்டியக்கலை, நாடகக்கலை முதலிய கலைகள் எல்லாம் இன்றைக்கு அழிந்து கொண்டு போகின்றன. அதே போன்றுதான் ஓவியக் கலைகளும் அழிந்து கொண்டே போகின்றன. தஞ்சை அரசரால் அமைக்கப்பட்ட ஓவியங்கள் எல்லாம் இன்றைக்கு அழிந்து கொண்டே போகின்றன. அவைகளைப் புதுப்பிப்பதற்குக் கூட முடியவில்லை இந்தக் கலைகளை எல்லாம் நாம் பாதுகாக்க வேண்டியிருக்கிறது.

அதே போன்றுதான் நல்வாழ்க்கைக்குப் பலன் தரக்கூடிய தேவாரம், திருவாசகம் இவைகளை எல்லாம் நல்ல முறையில், அர்த்தம் விளங்கக்கூடிய முறையில் எல்லோரும் படிக்கவேண்டும். படிப்பதோடு மட்டுமல்ல, அதைத் தானும் அனுபவித்து மற்றவர்களும் அனுபவிக்கும்படியான நிலையில் அவைகளைப்பாராயணம் செய்யவேண்டும். இவைகளை எல்லாம் நடைமுறையில் சீராகப் பயன் தரத்தக்க முறையில் கொண்டு வரவேண்டும்.

சரியான பரிபாலனம்

அறநிலையங்கள், கோயில்கள், மடங்கள் எல்லாம் சீரான முறையில் நடைபெற வேண்டும். சீராகப் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த வகையில் அதிலுள்ள நிதிகளைத் தவறுதலாகப் பயன்படுத்துவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அந்த ஸ்தாபனங்கள் சரியான அளவில் பாதுகாக்கப்படவேண்டும். சரியான அளவில் பரிபாலனம் செய்யப்பட வேண்டும். இன்னும் அந்த ஸ்தாபனங்களில் கிடைக்கக்கூடிய நிதிகள் மக்களுடைய வளர்ச்சிக்கும்பயன்படவேண்டும் என்ற அறநிலையங்களின் உயர்ந்த கொள்கைகளுக்குக் குந்தகம் இல்லாத வகையில் இருக்க வேண்டும்.

ஆக, இந்தத் தர்ம ஸ்தாபனங்கள் சரியாக நடைபெறுவதற்கு, அதில் பற்று உள்ளவர்களுக்கு, நம்பிக்கை உள்ளவர்களுக்கு மனது புண்படாமல், உயர்ந்த இலட்சியங்களுக்கு முரண்பாடு இல்லாமல் அவை எந்த நோக்கத்தோடு நிறுவப்பட்டனவோ அந்த நோக்கத்திற்குக் குந்தகம் இல்லாமல் செயல்படுவதற்கு வேண்டிய மேற்பார்வை செய்வது அவசியம்.

சட்டரீதியான நடவடிக்கை

அறநிலையப் பாதுகாப்பிற்குத் தகுந்தபடி, சட்ட ரீதியான நடவடிக்கையை அரசாங்கம் எடுப்பது அவசியமாயிற்று.

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் 1927வது ஆண்டில், முதன் முதலில் கொண்டுவரப் பட்டது. அதற்கு முன்புகூட ஓரளவுக்குக் கட்டுப்பாடு இல்லாமல் இல்லை. அதற்கு முன்பு ஏதாவது ஒரு தேவஸ்தானம் சரிவர நடைபெறவில்லை என்று சொன்னால், சிவில் ப்ரொஸீஜர் கோடின்கீழ் பொது மக்கள் சார்பாக அட்வகேட் ஜெனரல் கோர்ட்டில் வழக்குப்

போட்டு, வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது உண்டு. அதற்குப் பிறகு இந்தத் தேவஸ் தானங்களின் நிர்வாகத்தைச் சீராகக் கவனிக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடுதான் சட்டம் ஏற்படுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

கடைசியாக 1951-ல் அறநிலேயப் பாதுகாப்பு இலாகாவே சர்க்காரின் ஓர் இலாகாவாக மாற்றி அமைக்கப்பட்டு, பின்னல் 1954-ல் இந்தச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு, இப்பொழுது நிர்வாகம் நடந்துகொண்டு வருகிறது. பின்னல் மடங்கள் வேறு, கோயில்கள் வேறு என்பதாக, உயர்நீதி மன்றம் ஒரு வழக்கில் தீர்ப்புக் கூறியதால் மடங்களின் நிர்வாகத்தையும் சட்ட ரீதியான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர, அறநிலேயப் பாதுகாப்புச் சட்டம் அண்மையில் திருத்தப்பட்டது.

இது, மதச் சார்பற்ற அரசாங்கந்தான். ஆனல் இந்த அரசாங்கம் மக்களுடைய நன்மை தீமைகளில் அக்கறை கொண்டிருக்கிறது. ஒரு சில மக்கள் தர்ம ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி இருக்கிருர்கள். அந்தத் தர்ம ஸ்தாபனங்கள் சீராக நடைபெறவில்லேயென்ருல், சம்பந்தப்பட்ட மக்கள் பாதிக்கப்படுகிருர்கள். அவர்களுக்குப் பரிகாரம் காண்பது இந்த மதச் சார்பற்ற அரசாங்கத்தின் கடமை, பொறுப்பு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அரசாங்கப் பொறுப்பு

மதச் சார்பற்ற அரசாங்கம் என்ருல் எல்லா மதங்களுக்கும் பாதகம் ஏற்படாமல் அதனதன் கொள்கைகளேக் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதுதான். அவைகளேப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதைச் செய்வதுதான். எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அதை நம்பி இருக்கக் கூடியவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுதான். அதுதான் மதச் சார்பற்ற அரசாங்கத்தின் கடமை, பொறுப்பு.

எல்லோரும் இந்நாட்டுப் பிரஜைகள். அவர்களேப் பாதுகாக்க அரசாங்கத்திற்கு உரிமையும் பொறுப்பும் இருக்கிறது. தொன்று தொட்டு உள்ள ஒரு ஸ்தாபனம் சீராக நடைபெறவில்லே யென்ருல் அரசாங்கம் தலேயிடுகிறது. இதற்கு முன்பு அந்நிய ஆட்சி நடந்த காலத்தில் ஒரு சில ஆண்டுகள் இந்த ஆலயங்கள் செம்மையாக நடைபெற வேண்டும் என்கிற நோக்கத்தோடு தனியாக அதற்கொரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர்கள். அப்போது அரசியல் சட்டம் அமுலில் இல்லே. அரசியல் சட்டத்தை நாம் ஏற்படுத்திக் கொண்ட பிறகு அதை மனத்தில் வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினேயைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஓர் ஆலயம் என்ருல் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே வழிபடுகிருர்கள். அவர்களுக்குச் சில உரிமைகள் உண்டு. சில நன்மைகளே அவ்வாலயத்தின் மூலமாகவோ, மடாலயத்தின் மூலமாகவோ அவர்கள் எதிர் நோக்கி இருக்கிருர்கள். ஆனல் அங்கே இருந்து அவற்றைப் பரிபாலிக்கின்றவர்கள் தவருக நடந்து கொள்வார்களேயானல் இந்தப் பெரும்பாலான மக்கள்

அதனல் பாதிக்கப்படுவார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது இந்த அரசாங்கத்தின் கடமையாகும். அது அரசியல் சட்டத்திற்கும் விரோதமான செயல் அல்ல.

இந்துக்களுக்கு மட்டுமா?

இதெல்லாம் இந்துக்களுக்கு மட்டும்தானு? இந்துமத ஸ்தாபனங்களுக்குத்தானு இந்தப் பாதுகாப்பு, மேற்பார்வை, தலையீடு என்று சிலர் கேட்கிருர்கள்.

இப்படித் தலையீடுவதுஎன்ருல், மற்ற மதத்தினர்கள் என்ன ஆவது என்று குறிப்பாகக் கேட்கப்படுகிறது. இத்தகைய சட்டங்கள், இத்தகைய நடவடிக்கைகள், இத்தகைய தலையீடுகள் இவைகளினுல் இந்து மதத்தைச் சார்ந்தவர்களுக்கு ஒரு பாதகம் வரும். இப்படி எங்களுக்கு மாத்திரம் கஷ்டம் எதற்கு, மற்றவர்களுக்கு மட்டும் இல்லாமல், இது பாரபட்சம் இல்லையா என்று சொல்லலாம். ஆனுல், அப்படியில்லை. அந்தத்தர்மஸ்தாபனங்கள்சீராக நடைபெற வேண்டுமென்றநோக்கத்தோடுதான் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதுதான் இலட்சியம். அடிப்படை நோக்கம். இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மற்ற மதத்தினர்களுக்கு இம் மாதிரிச் சட்டம் வரவில்லையே! மற்ற மதத்தினர்கள் நன்மையை அடைய வேண்டாமா என்ற கவலையைத் தெரிவித்தால், அது வரவேற்கக் கூடியதுதான். அவர்களுக்கு நான் சொல்லுகிறேன். முஸ்லிம் மதத்தைச் சார்ந்த ஸ்தாபனங்களைப் பொறுத்த மட்டில் மத்திய அரசாங்கம் பார்லிமெண்டில் ''வக்ப் ஆக்ட்'' என்ற சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. அந்தச் சட்டம் நமமுடைய ராஜ்யத்திலும் அமுலுக்கு வந்திருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ் ஒரு போர்டும் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்துக்களுக்குப் பாதகமான வகையில்தான் இதை ஏற்படுத்தி யிருக்கின்ருேம் என்று யாரும் நினைக்கவேண்டாம். நம்முடைய முக்கியமான குறிக்கோள், தர்ம ஸ்தாபனங்கள் எல்லாம் சரியாக, சீராக நடைபெற வேண்டும். அந்த ஸ்தாபனங்களில் எல்லாம் தவறுகள் நடைபெருமல், எந்த நோக்கத்திற்காக அந்த ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் எல்லாம், அந்த இலட்சியங்கள் எல்லாம் நிறைவேற வேண்டும், அதுதான் முக்கிய நோக்கம்.

சட்டம் எதற்கு?

இந்தச் சட்டம் எதற்கு, இப்போது நடப்பது போலவே இதை விட்டுவிடலாம் என்றும், ஊழல்கள் இருந்து கொண்டிருக்கிறது என்ருல், எல்லாவற்றிலும் இம்மாதிரிதான் ஊழல்கள் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தால் எந்தவிதமான பிரயோசனமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை யென்றும் கூறப்படுகிறது. ஊழல்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்று சொன்னுல் அதை அகற்றுவதற்காகத்தான் நாம் எல்லோரும் பாடுபடுகின்ருேம்.

சக்தியை வியந்தது!

ஆதியும் அந்தமும்
இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்
கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ
வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள்
வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே
விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல்
நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள்
கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே எம்தோழி
பரிசேலோர் எம்பாவாய்

—மாணிக்கவாசகப் பெருமான், திருவாசகம்

Space donated by

ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

கோயமுத்தூர் ரோடு :: பொள்ளாச்சி

ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

சித்த வைத்திய சிரோன்மணி

திரு. வி. பலராமையா, பி.ஏ., பி.எல்., அவர்கள்



அமுதம் என்ற சிவநீரைப் பருகுவதால் நரைதிரை மாறி நமனையும் வெல்லலாமென்பதை முன் கட்டுரையில் பார்த்தோம். இப்படி நமனை வென்ற ஞான சித்தன் நவக்கிரங்களின் கோளாறுகளுக்கு அப்பாற்பட்டவன். வேண்டுமாயின் தானே உயிர்களைச் சிருஷ்டிக்க வல்லவன். விசுவாமித்திரன் திரிசங்கு சுவர்க்கத்தைச் சிருஷ்டித்ததுபோல் பல உலகங்களைச் சிருஷ்டிக்க வல்லவர்கள். இறந்தோர்களை உயிர்ப்பிக்க வல்லவர்கள். ஞானசம்பந்தர் அவ்விதம் செய்தாரென்பதை நூல்கள் மூலமாய் அறிகிறோம். அந்த வல்லமையைக் குறித்து நாம் எள்ளளவும் ஐயப்பாடடைய வேண்டியதில்லை. சித்தர்கள் பூத உடலுடன் உலாவலாம். சூக்சும உடலுடன் உலாவலாம். வேறு எந்த உருவத்திலாயினும் உலாவலாம். ஒரே காலத்தில் தங்கள் பூதவுடலுடன் பல இடங்களில் காட்சியளிக்கவல்லவர்கள்.

சித்தர்கள் வழியில் பலர் இந்தப் பூத உடலில் உலாவுகின்றனர். சிலர் ஆரம்பப் பள்ளியிலும், சிலர் உயர்நிலைப்பள்ளியிலும், மற்றும் சிலர் மேல்நாட்டிலும் உள்ளனர். அவர்களில் சிலர் உட்கார்ந்த இடத்திலேயே அமர்ந்திருக்கின்றனர். சிலர் படுத்த படுக்கையாகவே இருக்கின்றனர். சிலர் உலாவிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள்

தோற்றம் பிச்சைக்காரர்கள் தோற்றம், பித்தர்கள் தோற்றம். யாரையும் எதையும் அவர்கள் கேட்பதில்லை. அன்புடன் ஏதாவது கொடுப்பின் அந்த அன்பைப் பாராட்டிப் பெற்றுக் கொள்வர். இப்படிப்பட்ட மஹான்களின் தரிசனம் நம் போன்றவர்களுக்கு மிக்க நலனைத் தரும். வழி தெரியாதவனுக்கு வழி தெரிந்தவன்தான் வழியைக் காட்ட முடியும். பல மஹான்கள் பரமபத நாட்டின் எல்லைகளில் உலாவுகின்றனர். அவர்களில் பலர் நம்மிடம் பேச மாட்டார்கள். சிலர் பேசுவர். பேசினும் நமக்குப் புரியாத ஒரு பாஷையாக விருக்கும். சுவாமியார் என்ன சொல்கின்றாரென்று பக்கத்திலுள்ளோரைக் கேட்க வேண்டிய நிலைமை ஏற்படும். நமக்கு முதலில் அவர்களிடத்தில் வெறுப்புகூடத் தோன்றக்கூடும். லௌகீக ஆசாரம் அவர்களிடத்திலிருக்காது. பல்லைத் துலக்க மாட்டார்கள். குளிக்கமாட்டார்கள். அழுக்கடைந்த கந்தைத் துணிகளையோ, கோணிப்பைகளையோ கட்டிக் கொண்டிருப்பர். சிலர், நிர்வாணமாகவே யிருப்பர்!

இப்படிப்பட்ட பெரியார்களைத் தரிசிப்பதின் பயன் யாது? அவர்கள்தான் பேசுவதில்லையே என்ற ஐயப்பாடுகள் நமக்குள் தோன்றுவது தவறாகாது. நல்லோரைக் காண்பதுவும் நன்றே யென்பது முதுமொழி. சித்தர்கள் பார்வையின் மாத்திரத்திலேயே நம்மைப் பக்குவப்படுத்தக் கூடியவர்கள். மீன் தண்ணீரில் நூல் இழுத்துச் செல்லுவதுபோல் தன் முட்டைகளை இட்டுக்கொண்டேபோகும். அந்த முட்டைகளை அம்மீன் திரும்பிப் பார்த்த அளவில் குஞ்சுகளாகி விடுகின்றன!

''தண்ணீரி லிருக்கும் மீன்கள்
தண்ணீரிற் கருவை வித்திக்
கண்ணினாற் பார்க்கும்போது
கயலுருவானாற் போல
நண்ணிய குருவைக் கண்டு
நாதனல்லுருவைச் சேர்த்து
விண்ணின் மேனைகை நாதாம்
மெல்லடி வெளிபார்
நெஞ்சே''

என்னும் செய்யுள் நமக்கு ஆதாரமாயுள்ளது. ஆகவே சித்தர்கள் பார்வையினாலேயே உயர்ந்த தீட்சையுண்டாகின்றது.

மற்றும் அவர்களுடைய உள்ளத்திலே நாம் புகுந்துவிட்டால் போதும். அவர்களை நாம் மறுமுறை சந்திக்காவிடினும் பரவாயில்லை. அவர்கள் இருந்த இடத்திலிருந்தே நம்மைப் பக்குவப்படுத்தக்கூடிய வல்லமையுண்டு.

உதாரணமாக, ஆமையானது தன் முட்டைகளைக் குளக்கரையில் வைத்து விட்டு குளத்தின் நீரில் உலாவிக் கொண்டிருக்கும். என்றோ ஒருநாள் தன் முட்டைகளை நினைத்த மாத்திரத்தில் அம்முட்டைகள் குஞ்சுகளாக வெளிப்படுகின்றன வென்பதைக் கீழ்க்கண்ட செய்யுள் விளக்கும்.

''குளத்திலே கிடக்குமாமை
குளக்கரை முட்டையிட்டுக்
குளத்துநீர்க் குள்ளிருந்து
குறிப்புட னினைக்கும்போது
களத்திலே புதைத்தமுட்டை
கருவுரு வானாற்போலுன்
உளத்திலே நாகைநாத
குருவறிந் துணர்வாய்
நெஞ்சே''

சித்தர்கள் மக்கள் நலனுக்காகப் பல இடங்களில் பூத உடலுடன் தோன்றி ஆங்காங்கிருக்கும் மக்களுக்கு மருந்து, மந்திரம் முதலியவைகளைத் தந்து, உடற்பிணிகளையும் மனப்பிணிகளையும் போக்கிவந்தனர். ஓர் மரத்தின்

கீழ் உட்கார்ந்து கொள்வர்; அம்மரத்தின் வேர், பட்டை, பூ, காய், பழம், இலை, கொழுந்து முதலியவைகளைப் பிணிக்குகந்தவாறும், வயதிற்குகந்தவாறும் மக்களுக்குக் கொடுத்து மருத்துவம் செய்வர். நாளடைவில் அப்பெரியோர்கள் அவ்விடத்திலேயே சமாதியடையப் போவதாக மக்களுக்குச் சொல்வர். ஓர் குழியில் உட்கார்ந்து மண்மூடச் சொல்வர். ஆனால் அவர்கள் அக்குழியில் பிணமாவதில்லை. அந்த உடலை அங்கு உயிருடன் வைத்திருப்பர். ஒரே காலத்தில் பல இடங்களில் ஒரே உருவத்துடன் சமாதியடைவர். அவ்வுடல் பல்லாயிரக் கணக்கான வருடங்கள் அழியாமலிருக்கும். அதையே பெரியோர்கள் சீவசமாதியென்பர். அம்மரத்தைத் தலவிருட்சமென்பர்.

அந்த சமாதிகளின் பேரிலேயே மக்கள் பெரிய பெரிய ஆலயங்களை அமைத்தனர். நாளடைவில் அப்பெரியோர்களின் முக்கியத்துவத்தைப் பலகாரணங்களினால் பாராட்டாமல் அவர்கள் சமாதிகளின் பேரில் பல பலவிதமான உருவங்களையமைத்து அவைகளை வழிபடலாயினர். அந்த ஆலயங்கள் அப்பெரியார்களின் சமாதிகளென்று சொல்லிக் கொள்வதற்கும் அருவருப்படைந்தனர். அவ்வாலயங்களைச் சித்தர்கள் சமாதி நிலையங்களென்று குறிப்பிடுவதும் நம் சமுதாயத்துக்குப் புறம்பானதென்று கருதலாயினர்.

அடுத்த கட்டுரையில் சமாதித் தலங்களைப்பற்றியும் எந்தெந்தத் தலங்களில் எந்தெந்த சித்தர்கள் அடங்கியுள்ளனரென்பதைப் பற்றியும் எழுதுவோம்.

திருச்சிற்றம்பலம்

பொடிக்கனகத் திருமேனித் திருமணங்கற் பூரப்
பொடி மணத்தோ டகம்புறமும் புதுமணஞ்செய் யமுதே
அடிக்கனக வம்பலத்தே திருச்சிற்றம் பலத்தே
ஆடல்புரி யரசேயென் அலங்கலணிந் தருளே.

—திருஅருட்பா

மணமும் பொற்குணமும் கொண்ட பொடி

T. A. S.

ரத்தினம் பட்டணம் பொடி

தபால் பெட்டி எண், 1151, மதராஸ்-21



பகவான் பரமஹம்சர் புகட்டிய பெருநெறி விளக்கம்

குழுமியிருந்த அன்பர்களிடம் பரமஹம்ச தேவர் இங்ஙனம் பகர்ந்தார்: ''ஈசுவர சாக்ஷாத்காரம் செய்துள்ள மனிதனுக்கு அகங்காரம் இல்லை. புண்ணியம் பாபம் என்னும் இருவினைகளை அவன் கடந்தவனாகிறான். ஆனால் இன்னும் ஈசுவர சாக்ஷாத்காரம் அடையப் பெறாதவர்கள் சிலர் பாப புண்ணியத்தைத் தாங்கள் கடந்துவிட்டதாகக் கூறுகின்றனர். அப்படி அவர்கள் சொல்லுவதெல்லாம் வெறும் வாய்ப் பேச்சு. தீவினை ஏதேனும் ஒன்றைச் செய்தான பிறகு தங்கள் நெஞ்சத்தில் வேதனை உண்டாவது அவர்களுக்குத் தெரியும். அத்தகைய பொய் வேஷம் கூடாது. ஈசுவர சாக்ஷாத்காரம் செய்துள்ள பக்தர்கள் சிலர் உள்ளத்தில் தாஸ்ய அகங்காரத்தைக் கடவுள் வைத்திருக்கிறார். தாஸ்ய அகங்காரம் · படைத்துள்ள பக்தன் 'ஈசா நீ இறைவன்; நான் உன் வேலைக்காரன். உன் ஆணைக்கு உட்பட்டு நான் பணிவிடை செய்கிறேன்' என்று பகர்கிறான். அத்தகைய பக்தன் கடவுள் விஷயத்தைப் பற்றியே சர்வகாலமும் பேசுகிறான். ஈசனுடைய கிருத்தியங்களையே அவன் எப்பொழுதும் செய்துவருகிறான். உலகப் பற்றுடையவர்களது கூட்டுறவில் அவன் இன்பம் காண்பதில்லை. பகவத் கைங்கரியம் இல்லாத எந்தக் கர்மத்தையும் அவன் பொருட்படுத்துவதில்லை. எனவே பக்தர்களுடைய உள்ளத்திலும் வேற்றுமை உணர்வை இறைவன் வைத்திருக்கிறார்''

அன்பர்: ''ஐயனே, ஈசனுடைய திருக்காட்சியை அடையப் பெற்றான பிறகு மக்கள் உலகத்தில் வாழ்ந்திருக்கலாம் என்று

தாங்கள் பகர்கின்றீர்கள். கடவுளைக் காண்பது மனிதனுக்குச் சாத்தியமா?''

பரமஹம்ச தேவர்: ''பஞ்சேந்திரியங்கள் வாயிலாகவோ, மனதைக் கொண்டோ கடவுளை அறிந்துகொள்ள முடியாது. ஆனால் பரிசுத்த மடைந்த மனதுக்குப் பகவானது காட்சி கிட்டுகிறது. உலகப் பற்றில்லாத மனதே பரிசுத்தம் அடையப் பெற்றுகிறது''

அன்பர்: ''கடவுளை யாரே அறிய வல்லவர்?''

பரமஹம்ச தேவர்: ''நீர் சொல்லுவது சரி கடவுளை உள்ளபடி அறிந்துகொள்ள யாருக்குத்தான் இயலும். ஆனால் கடவுளை நாம் முற்றும் அறியாதவர்கள் அல்லர். வாழ்க்கையில் நம் தேவைக்கு ஏற்ற அளவு கடவுளை நாம் ஓரளவு அறிந்துகொள்ள முடியும். கிணற்றிலிருக்கும் நீர் முழுவதும் நமக்குத் தேவை இல்லை. ஆனால் நமது தாகசாந்திக்கு ஏற்ற அளவு அதனின்று நாம் நீர் எடுத்துக் கொள்ளலாம். எறும்பு ஒன்று ஒருதடவை ஒரு சர்க்கரைக் குன்றை அணுகியது. அக்குன்று முழுதும் அதற்குத் தேவை இல்லை. இரண்டொரு சர்க்கரைத் தூள் அதற்குப் போதுமானது. அதே பாங்கில் நாம் உய்வு அடைவதற்கு ஏற்றவாறு ஒரு சிறிதளவாவது நாம் கடவுளை அறிந்துகொண்டால் போதுமானது''

அன்பர்: ''ஐயனே, நாம் தாக ஜ்வரத்தில் வருந்திக் கொண்டு இருக்கின்றோம். ஒரு சிறிதளவு ஜலத்தைக் கொண்டு நாம் திருப்தியடைய முடியாது. அருந்த அருந்த ஜலம் இன்னும் வேண்டும் என்கின்றோம். அதே பாங்கில் கடவுளை மேலும் மேலும் அறிந்துகொள்ள வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்.

பரமஹம்ச தேவர்: ''அது உண்மையே. ஆனால் தாக ஜ்வரத்தை அகற்றுவதற்கான மருந்து இருக்கிறது. அந்த ஔஷதத்தை உண்டு நோயைப் போக்கி விட்டால் பிறகு ஆசை ஒன்றும் வருவதில்லை''

அன்பர்: ''அந்த மருந்துதான் என்ன ஐயனே?''

பரமஹம்ச தேவர்: ''பக்தன் ஒருவன் நல்லார் இணக்கம் கொள்ளவேண்டும். இறைவன் திருநாமத்தை அவன் இடையறாது ஓதிக்கொண்டிருக்கவேண்டும். இறைவனுடைய மகிமையைக் குறித்து இடையறாது பக்தி பூர்வமாகப் பாட வேண்டும். இறைவனிடம் அவன் திரும்பத் திரும்பப் பிரார்த்தனை பண்ண வேண்டும். அன்னை பராசக்தியிடம் நான் இங்ஙனம் பிரார்த்தனை செய்தேன்; 'தாயே! நான் ஞானத்தை வேண்டுகிறேன் அல்லன். என்னிடமிருக்கின்ற ஞானத்தையும், அஞ்ஞானத்தையும் உன்னிடம் தந்துவிடுகிறேன். அவை இரண்டும் உனக்கு உரியவைகளாக உன்னிடமே இருக்கட்டும். தூய அன்பு ஒன்றையே நான் வேண்டுகிறேன். உன்னுடைய தாமரைத் திருவடிகளில் நான் மாறாத பக்தி கொள்ளும்படி நீ எனக்கு அனுக்கிரகம் செய்வாயாக!' இதைத் தவிர நான் தெய்வத்திடம் எதையும் கேட்கவில்லை. இத்தகைய மனநிலைதான் நோயைப் போக்குதற்கு உற்ற ஔஷதமாகிறது.

''நோய்க்கு ஏற்ற சிகிச்சை முறையைக் கையாண்டாக வேண்டும். கிருஷ்ண பரமாத்மா

கீதையில் இங்ஙனம் பகர்ந்துள்ளார்: 'ஏ அர்ஜுனா, என்னிடம் சரணாகதி யடை. பாபங்கள் அனைத்தினின்றும் உன்னை நான் விடுவிப்பேன்.' ஆக, இறைவனுடைய திருவடிகளில் அடைக்கலம் புகுதல் வேண்டும். நல்ல விவேகத்தை அவர் நமக்கு அருளிச் செய்வார். நம்முடைய முன்னேற்றத்தைப்பற்றிய பொறுப்பு அனைத்தையும் அவரே எடுத்துக் கொள்வார். அப்படி அவரால் ஆட்கொள்ளப்படும் பொழுது தாகஜுரம் என்னும் நோய் தானாக அகன்று போகிறது. உலக மனப்பான்மை படைத்திருக்கிற மனிதன் கடவுளை அறிந்துகொள்ள வல்லவன் ஆவானா? ஓர் அழாக்கு நீர் கொள்ளக் கூடிய சிறு பாண்டத்தில் நான்கு ஆழாக்கு நீரை அடைத்து வைக்க முடியுமா? இறைவன் தானே கிருபை கூர்ந்து தமது சொரூபத்தைக் காட்டி அருளினால் அன்றி நாம் அவரை அறிந்துகொள்ள முடியாது! ஆதலால் அவரிடம் அடைக்கலம புகுந்திருப்பது ஒன்றே நமக்கு உற்ற உபாயமாகும். நம்மைக்கருவியாக வைத்துக் கொண்டு அவர் எதை வேண்டுமானாலும் செய்யட்டும். அவருடைய திருவுளப் பாங்கின்படியே யாவும் நடைபெறுவதாகட்டும். அவருடைய அனுக்கிரகத்தாலன்றி மனிதனுக்குத் தனி வல்லமை யாது உளது?''

மற்றொரு நாள் தம்முடன் கூடியிருந்த ஆதார், மனோமோகன், ராக்கால், மகேந்திரர், ஹரீசர் ஆகிய அன்பர்களோடு பரமஹம்சர் பேசிக்கொண்டிருந்தார். பிற்பகல் சுமார் இரண்டு மணிக்கு அந்தச் சம்பாஷணை நிகழ்ந்தது. கிருஷ்ண சைதன்யருடைய ஆனந்த பரவச நிலையை பரமஹம்ச தேவர் அவர்களுக்கு எடுத்து விளக்கிக்கொண்டு இருந்தார்.

பரமஹம்ச தேவர்: ''கிருஷ்ண சைதன்யர் மூன்றுவித மனநிலைகளைப் பெற்றிருந்தார். சாதாரண மனநிலை முதலாவதாகும். உலகிலுள்ள பொருள்களை உள்ளவாறு கிரகிக்கும் நிலை அதுவாம். ஸ்தூலப் பொருட்களையும் சூட்சமப் பொருட்களையும் நுகரவல்லதாய் அது இருந்தது. அதற்குத் தான் வியவஹார அவஸ்தை என்று பெயர். இரண்டாவது மனநிலை அதைவிடச் சற்று மேலானது. வெளி உலக ஞாபகம் அப்பொழுது பெரிதும் மறைந்து போய் விட்டது. அந்நிலையில் அவர் தமது காரண சரீரத்தில் இருந்தார் என்று கூற வேண்டும். அவர் அப்பொழுது ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்து மூழ்கியவராய் இருந்தார். அதைப் பாவசமாதி என்றும் சவிகல்ப சமாதி என்றும் சொல்லலாம். அதிலும் மிக்கது மூன்றாவது மனநிலை. அப்பொழுது அவருடைய மனது அறவே பரம்பொருளில் கலந்ததாய் விட்டது. மகா காரண நிலை என்று அதைக் கூறலாம்.

''அப்படிக் கிருஷ்ண சைதன்யர் பெற்றிருந்த மனநிலைகளை வேதாந்த சாஸ்திரம் கூறுகிற பஞ்சகோசங்களோடு ஒப்பிடலாம். ஸ்தூல சரீரம் அன்மைய கோசமாகிறது. பிராணமய கோசமும் மனோ மயகோசமும் சூட்சும சரீரமாகிறது. விக்ஞான மயகோசமும் இந்தச் சூட்சும சரீரத்தில் சேருகிறது. ஆனந்த மயகோசம் காரண சரீரத்துக்கு ஒப்பாகிறது. மகா காரணம் என்று சொல்லப்படுவது பஞ்ச கோசங்களுக்கும் அப்பாற்பட்ட

தாம். அந்த அதிக நிலையில் கிருஷ்ண சைதன்யருடைய மனது ஒடுங்கிய பொழுது அவர் சமாதி நிலையில் இருந்தார். அதே சமாதி நிலையை நிர்விகல்ப சமாதி என்றோ அல்லது ஜட மாதி என்றோ கூறலாம்.

''புற உலக ஞாபகம் தமக்கு இருந்த பொழுது கிருஷ்ண சைதன்யர் இறைவனுடைய திரு நாமத்தை ஓதிப் பாடினார். பாவ சமாதி நிலையில் அவர் இருந்த பொழுது அவர் பக்தர்களுடன் கூடி ஆனந்தத் தாண்டவம் புரிந்தார். நிர்விகல்ப சமாதியை எட்டிய பொழுது அவர் அசைவற்று ஜடம் போன்று இருந்தார்.

''பேரன்பே வடிவெடுத்து வந்தவர் கிருஷ்ண சைதன்யர். இறைவனை எப்படி நேசிக்க வேண்டும் என்று உலகத்தவர்களுக்குக்காட்டித்தருதற்கு அவர் மண்ணுலகில் வந்துள்ளார். இறைவனிடம் பக்தி கொள்ள ஒருவன் கற்றுக்கொள்வானாகில் வாழ்வில் பெறவேண்டிய பேறு முழுவதையும் அவன் பெற்றவன் ஆகின்றான். அப்படித் தூய அன்பை அடையப் பெற்றவனுக்கு ஹடயோகம் போன்றவைகள் ஒன்றுக்கும் உதவமாட்டா.

ஓர் அன்பர்: ''ஐயனே, ஹடயோகம் என்பது என்ன?''

பரமஹம்சதேவர்: ''ஹடயோகம் பயிலுகின்ற தாசகன் ஒருவன் தன் சரீரத்தின்மீது ஏராளமாகக்கருத்துச் செலுத்துகிறான். தன்னுடைய குய்யத்தின் மூலம் நீர் உறிஞ்சித் தன் குடலையெல்லாம் அவன் கழுவுகிறான். தன் குறியின் வாயிலாக அவன் நெய்யையும் பாலையும் சரீரத்துக்குள் உறிஞ்சியெடுக்கிறான். தன்னுடைய நாவை வெவ்வேறு விதங்களில் வளைக்க அவன் கற்றுக்கொள்கிறான். அசையாது ஒரே ஆசனத்தில் அமர்ந்திருக்க அவன் பயிலுகிறான். ஏதோ சில வேளைகளில் மட்டும் அவன் சாய்ந்திருந்து ஓய்வு எடுத்துக் கொள்கின்றான். இப் பயிற்சிகள் எல்லாம் பிராணனை வசப்படுத்துவதால் வந்து அமைவனவாம். மாந்திரிகன் ஒருவன் ஜாலவித்தைகள் சில செய்து கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய நா வளைந்து அண்ணத்தை எட்டி நாசித் துவாரத்தை அடைத்து விட்டது கணப்பொழுதில் அவன் அசைவற்று அவன் ஜடப்பொருள் போன்று ஆகிவிட்டான். அவன் மாண்டு போனான் என்று மக்கள் கருதினார்கள். பூமியில் புதைக்கப்பட்டுப் பல ஆண்டுகள் அவன் மண்ணில் மறைந்து கிடந்தான். ஆனால் அதன் பிறகு எப்படியோ அவன் புதைக்கப்பட்டிருந்த இடம் வாய் திறந்து கொண்டது. அம்மனிதனுக்குத் திரும்ப உலக உணர்ச்சி வந்தது. துள்ளிக் குதித்து எழுந்து, 'வா சக்கம்மா தேவி, வா சக்கம்மா தேவி' என்று கத்தினான்! இச் செயல்கள் யாவும் பிராணனுக்குரியவைகளாம்.''



அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
காளி மார்
Kali mark
வாத்திய கோஷ்டித்
தலைவர் விரும்புவதும்
காளி மார்க் பானம்தான்.
ஆயிரக் கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாருத ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளி மார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.



ஸ்ரீ அரவிந்தர்

தி. ரா. கபாலி சாஸ்திரிகள்

ஸ்ரீ அரவிந்தரைக் குறித்து எழுதவேண்டும் என்கிருர் நண்பர்.

''என்ன எழுதுவது? எதைப் பற்றி எழுதினுல் உங்களுக்குப் பிடிக்கும், படிப்போர்க்கு உதவும், யார் படிப்பார்கள் இதையெல்லாம்?''

''எல்லோரும்தான் படிப்பார்கள். படிக்கத் தெரிந்தவர்கள் படிப்பார்கள். உங்களுக்கு இஷ்டமான விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள் ஆனுல் ஒரு விஷயம் கேட்டுக் கொள்கிறேன். ருசிகரமாய் இருக்க வேண்டும். சுருக்கமாயிருந்தாலும் சம்மதம். புதிய...'' என்று வாக்கியத்தை முடிக்காமல், கருத்தைக் குறிப்பாகக் காட்டிவிட்டு, ''நீங்கள் எழுதிக்கொடுத்தால் போதும், எதுவானுலும் சரி'' என்று சொல்லி விடைபெற்றுச் சென்ருர்.

''ருசிகரம்'', ''புதியது'' இரண்டும் இணங்கும். உண்மைதான். யாரும் அறியாத புதியதைச் சாதிக்கப் பொய் சொன்ஞல்தான் காரியம் சித்திக்கும். அதற்கும் ஏராளமான கற்பனை வேண்டும். அப்படிக் கூடுமானுல் பொய் எப்போதும் உண்மையில் அளவுபட்டு, சிலபோது ருசிகரமாய் இருக்கக்கூடும்; ஆனுல் நீண்டு தங்க நிழலும் இல்லாமல் நிற்க அடிகோலும் இன்றி மடிந்துபோம். மறைந்துபோம். மாயமாகும்.

கண்டு கேட்டுத் தெளிந்த உண்மையைத்தான் கைப்பற்றல் வேண்டும் ஆனுல் யோகம், தத்துவம், ஞானம் முதலிய விஷயங்கள் எப்படி ருசிகரமாக இருக்கும்? அவையும் சிலருக்கு ருசிகரமாக இருக்கக்கூடும். ஆனுல் பொதுவாகப் பார்ப்போமாயின், மக்கள் என்ன கேட்கின்ருர்கள்? ''இந்தத் தத்துவங்கள் எல்லாமிருக்கட்டும். பின்னுல் பார்த்துக் கொள்வோம். அவரைப்பற்றிச் சொல்லும் ஐயா, அதுதான் தேவை. மகான்கள் வாழ்க்கை வரலாற்றில் எவ்வளவோ விசேஷங்கள் இருக்கும். அவை ருசிகரமாகவும் இருக்கும். கேட்போரையும் புனிதமாக்கும்'' என்பார்கள். உண்மை

சவரன்
பாக்குத்தூள்

Distributed by
JOTHI INDUSTRIES
MADRAS-21

தான். யோகம், தத்துவம், ஞானம்—இவற்றை மற்ருெரு தருணம் பார்ப்போம்.

சரித்திரத்தைக் கவனித்தால் அதிசயமாகத்தான் இருக்கின்றது. ஆனல் அவருடைய பழங் கதைகள் யாருக்குத் தெரியாது? ஸ்ரீ அரவிந்தர் ஜீவிய சரித்திரம் பல பாஷைகளில் வெளிவந்துள்ளது. வெளியாகாத உண்மைகள் உண்டு. அவற்றை அவர்கள் தாமே சொல்லவேண்டும்; சொல்லும் காலம் வருவதாகத் தோன்றவில்லை என்ருலும் எப்போதாவது எழுதிவிட நேரிடலாம்; இல்லாவிடில், மர்மமாக நின்று வெளியாகாமல் அடங்கிவிடும்!

பலருக்குத் தெரிந்த விஷயத்தை மற்ருெரு முறை சிந்தித்தால் அது தப்பாகுமா? அழகிய பொருள்களை நாம் பன்முறை கண்டு களிக்கவில்லையா? நமக்குப் பிரியமானவற்றை ஒருமுறை நோக்கியது போதும் என்கிருேமா? அதிசயங்களைக் கண்டு யாராவது சலிப்பதுண்டா? அதுவுமின்றிப் புனிதச் செயலை மறுபடியும் செய்தல் உயர்வுக்கு ஆதாரமாகும். இன்றேல், ராமாயணக்கதை, பெரிய புராணக் கதைகள் தெரிந்திருந்தும், ஏன் நாள்தோறும் பாராயணம் செய்கிருர்கள்? படிக்கப்படிக்கக் கீதையும் குறளும் சிந்தனையில் ஆழுங்கால் புது உணர்ச்சியும் புதுச் சுவையும் தட்டுமல்லவா? ஆனல் எல்லா மக்களுக்கும் தட்டாது. உண்மைதான். தவமுள்ளோர்களுக்குத் தவம் என்ருர்கள் ஆன்ருேர். உண்மை. சுவை உள்ளார்க்குச் சுவை. இதுவும் உண்மை.

• • •

அப்படியானல் ஸ்ரீ அரவிந்தரது வரலாற்றில் சிலவற்றைக் குறிப்பிடலாம். வங்கர்களின் நாட்டில் பிறந்தார்; சிறுவயதிலே சீமைக்குச் சென்ருர்; படிப்பு முடிந்தது; பரீக்ஷைகளில் தேறினர், மாபெரும் மேதாவி என்ற பெயர் பெற்ருர். ஊர் திரும்பி "பரோடா" ஸம்ஸ்தானக் கலாசாலையில் ஆசிரியராகப் பல வருடங்கள் சேவை புரிந்தார். வங்க நாட்டின் பிளவு காரணகாகச் சுதேசியம் கிளம்பிற்று; அத்தருணம் உத்தியோகத்தை உதறித்தள்ளித்தான் அதனில் நேரில் ஈடுபட்டார். இந்த அரசியல் புரட்சியில் இவர் பங்கு எவ்வளவு? ஆதியிலிருந்தே திரைமறைவில் நின்று வேலை செய்தார் என்று உலகம் சொல்லுகின்றது. இதனில் உண்மை உண்டு. ஆனல் பூரண உண்மையும், விவரங்களும், அங்குக் கையாண்ட தந்திரங்களும், நம் தலைவர் பிரான் திருவாய் மலர்ந்தாலொழிய, திருக்கரத்தால் எழுத்தில் வெளி

யிட்டாலன்றி, நாம் ஐயமற அறிந்துகொள்ள உபாயமில்லை. இது நிற்க. பிறகு புதுவைக்கு வந்து நிலைத்தார். புதுயோகம் பயின்று, அண்டியவர்களைப் பயிலச் செய்வதற்கு ஆசிரமம் முளைத்தது. வளர்ச்சி பெற்றது. பரவுகின்றது. மற்றது எல்லாம் உலகறிந்ததே.

இதில் எல்லாம் என்ன விசேஷம்? விசேஷம் உண்டோ இல்லையோ ஒரு விஷயம் தெளிவாகின்றது. சிறுவயதிலிருந்தே கவிதை, இலக்கியம், பல பழங்காலத்திய பாஷைகள், இக்காலத்து மொழிகள், தேச பக்தி- இவற்றிலெல்லாம் முன் வரிசையில் நின்று வந்தார் ஸ்ரீ அரவிந்தர். இவரது வரலாற்றை உற்றுப் பார்த்தோமானால், உலகில் வழங்குகின்ற ஒரு பொது நம்பிக்கை தவறி விழுகின்றது. அது என்ன? இயற்கைத் தத்துவத்தை விசாரிககின்ற மேல்நாட்டாரும், ஆன்மத் தத்துவம் விசாரிக்கினற கீழ்நாட்டாரும் ஏறக்குறைய ஏகமனதாய் ஒரு விஷயத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். அதாவது, ஒரு மனிதனது சொரூபமும், சுயவல்லமையும், சுய அறிவும் வளர்ந்து தனிமை பெற்று நல்லுருவாவதற்கு முக்கிய நிமித்தம், தாய் தந்தையர்களின் நிலைமை, பிறந்து வளருங்கால் சுற்றுப் பக்கங்களிலுள்ள நிலைமையும்தான். நமது நாட்டிலும் இதையே வேறு பாஷையில் சொல்வார்கள்— குலம், கோத்திரம், பரம்பரை. சகவாசம் என்று.

இவர் பிறந்தது நம் நாடாயினும், குழந்தைப் பருவத்திலேயே ஆங்கிலப் பாதிரிப் பள்ளியில் படிப்பு, ஆங்கிலேயர் பேச்சு இயற்கை ஆயிற்று. தாய் மொழி தெரியாது. தந்தை பெருங்குணமுடையவர்தாம், ஆனால் புது நாகரிகப்பித்து. ஏழு வயதுப் பிள்ளையைச் சீமைக்குச் செலுத்தினார். அங்கு நமது நாட்டன்பு இன்னதென்று, அதுவும் அக்காலத்தில், எண்ண முடியுமா, கனவிலும் காண முடியாதே! அப்படி இருந்தும், பதினான்கு ஆண்டு பிராயமுள்ள பிள்ளைக்கு நம் பாரத நாட்டன்பு தீச்சுடர்போல் கொழுந்துவிட்டெரிந்ததென்றால், அது எப்படி? விந்தையல்லவா? பின்னர் ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் முதல் வரிசையில் தேறினார். குதிரை ஸாரத்தியத்தில் பரீக்ஷைக்குச் செல்லவில்லை. பலன்? கலெக்டர் உத்தியோகத்திற்குக் கண்டம்தான். ஏன் அப்படி ராஜ போகம் தரும் உத்தியோகப் பெருமையைப் பாராட்டாமல், பணப் போராட்டம் இருந்தும், வறுமையைச் சட்டை செய்யவில்லை! அது அவருடைய சுயமான தீர்மானமா, இல்லை. ஏதேனும் மர்மம் உண்டா? அப்போதே, தான் பிறந்த புண்ணிய பூமி தன் சேவையைக் கோருகின்றது என்று அவர் அறிந்திருந்தாரா? இதற்கெல்லாம் விடையளிக்கத் துணிச்சல் வேண்டும். ஒன்று திண்ணம். சீமையில் இளம் வயதில் வாசம் செய்யும் போதே, ''நாம் சாதாரணமான உலக வாழ்க்கைக்காகப் பிறப்பெடுக்கவில்லை; நமது நாட்டுக்கும், பொதுவாக மக்களுக்கும் அரும் பெரும் சேவை புரியத் தேவையான ஸாமர்த்தியம் அமைந்தது இப்பிறப்பு'' என்ற சூசனைகள் அந்தரங்கமாகவும், ஆத்மார்த்தமாகவும் அவருக்குக் கிட்டியிருந்தன.

அதிகமாகப் பேசாமல், அடக்கமாக அனுபவங்களை அமர்த்திக் கொள்ளுதல் அவரியல்பு. விசித்திரமான கனவுகள்,

அதிசயமான தரிசனங்கள், உள்ளங்கவரும் அனுபவங்கள், இவர் வேண்டாமலும் பயிலாமலும் நேர்ந்து விடுமாம். இவர் சிந்தனையாளர்; ஆதலால் அவற்றை அக்கணமே ஏற்றுக்கொள்ளார். துடுக்குத்தனமான வெறும் தோற்றம் என்று தள்ளிவிட மாட்டாராம். அப்படிப் பொறுத்து நிற்றல் அன்றோ உண்மையான ஆராய்ச்சியின் முதல் குறி. பின்னர், காலம் செல்லச் செல்ல அவ்வதிசயங்களின் உண்மை தானே வெளிப்படுமாம். இவற்றையெல்லாம் சில சமயங்களில் தானே தெரிவித்துள்ளார். சில நூல்களிலும் வெளியாயுள்ளன.

சிறு பிராயத்திலிருந்தே இன்னதென்று விளக்கமாகாத ஏதோ ஒரு விசித்திரம் இவரைக் கவர்ந்தும், இவருட் புகுந்து இவரைக் காத்தும், வாழ்க்கையில் நடத்தியும், பிறப்பின் லக்ஷிய சித்திக்குச் செலுத்தி வருகின்றது. வேண்டுமானால் பாருங்கள், சில நிகழ்ச்சிகளைச் சிந்தித்துக் கவனியுங்கள். தனது இருபத்தோராம் ஆண்டில் சீமையிலிருந்து வந்தவர் பொம்பாய் அபொல்லோ பந்தர் துறைமுகத்தில் கப்பலைவிட்டுக் காலிட்டார். கால் அடி வைத்ததுதான், நல்வரவு கூறுவதற்கு ஒரு மாபெரும் அமைதி, நிசப்தம், எங்கும் ஒருவகை மௌனம் எங்கிருந்தோ தோன்றி அவரைக் கவர்ந்தது. சில மாதங்கள் அந்த அதிசயம் அடுத்து நின்றது. ஒரு சமயம் பரோடாவில் குதிரை வண்டி தாறுமாறாகச் சென்று இவருக்கு அபாயம் நேரிடவேண்டிய தருணத்தில், தைவத்தின் திரு உருவம் இவர் தம் உள்ளிருந்து அலைபட்ட கடல்போல் பொங்கி வெளிப்பட்டு, தற்சமயம்நேர்ந்த நிலைமையை மாற்றி, இவருக்கு நேர இருந்த விபத்தை விலக்கிற்று. ''காச்மீர'' தேசத்திற்குச் செல்லுகிறார்; அங்கே மலைப் பாறைகளின் மீது நடந்து போகும்போது, அந்தோ! சூனியம் போன்ற அகன்ற பெருவௌாகம் திடீரென்று தோன்றி இவரை அண்டிக்கொள்கின்றது. மற்றொரு தருணம் புனித நதி நர்மதையின் தீவிரமாக நடக்கின்றார். அங்கே ஒரு காளி கோவில். வீற்றிருக்கும் மூர்த்தி சிலைதான். இவர் திருக் கண்ணுக்குக் காட்சி அளித்தது மட்டும் அன்னை பராசக்தியே. ஆச்சரியம் ததும்பிய கம்பீர சொரூபத்துடன் தரிசனமளித்தது மகாதேவியே! சிலை காணவில்லை!

இது நிற்க; மரா்ட்டியர் யோகி விஷ்ணு பாஸ்கரர் செய்த உபதேசப்படி மூன்று இரவுகளில் சிந்தனைகளைச் சிதற அடித்தது. மோசமான நிலையில் அமர்ந்துவிட்டார். அப்போதிருந்து மனம் சூன்யமே. சிந்தனை அலைகளுக்கு இடம் இல்லை. தபஸ்விகளுங்கூட எத்தனை வருஷங்கள் பயிலவேண்டும் இந்நிலை பெறுதற்கு? மூன்றே நாள். முடிந்தது வேலை. இது சாமானியமான மனிதன் முயற்சியா? சாமானியமான மனிதன் வெற்றியா? வங்க நாட்டை விட்டுக் கப்பலேறி புதுவைக்கு வருவதற்கு முன்னர், பயணத்திற்கு அனுமதிச் சீட்டு பெற்றது அதிசயத்தில் அதிசயம். இன்னும் பல அதிசயங்கள் உள. சிந்தியுங்கள். பின்னர் பார்ப்போம். இவர் தம் இலக்கியம், தத்துவம், யோகம், ஞானம் எல்லாம்!

அரவிந்த பகவன்
வாழ்க்கை வாழ்க!
வாழ்க!

சுலபமானது!

தவணைகளில் வாங்குவது!



வி. ஜி. பன்னீர்தாஸ் & கோ.,

சைதாப்பேட்டை :: சென்னை-15.

போன் : 442333-442334

மந்திரங்கள்

சொத்துக்களுக்குப் பரம்பரை உரிமை என ஒன்று இருக்கிறது.

முப்பாட்டனுடைய சொத்துப் பாட்டனுக்குக் கிடைக்கிறது. பாட்டனுடைய சொத்துத் தகப்பனுக்கு வருகிறது. தகப்பனுடைய சொத்து மகனைச் சேருகிறது—இப்படியே தலைமுறை தலைமுறையாக வந்து கொண்டிருக்கிறது. இதைத்தான் சொத்துக்களின் பரம்பரை உரிமை என்று சொல்லுகிறோம்.

சொத்துக்களில் பரம்பரை உரிமை இருப்பது போலவே, வித்தைகளிலும் பரம்பரை உரிமை உண்டு. வித்தைகள் என்றால், இங்கே மந்திரங்கள் என்று பொருள்.

ஒருவருக்குத் தஞ்சாவூரில் வீடு இருக்கிறது. ஆனால் அவர் சென்னையில் உத்தியோகம் பார்க்கிறார். அவர்தான் தஞ்சாவூரில் இல்லையே என்பதற்காக, அவருடைய தஞ்சாவூர் வீட்டை யாராவது எடுத்துக்கொண்டு விட முடியுமா? அப்படி எடுத்துக் கொண்டால், அது திருட்டுக் குற்றம் அல்லவா?

அதேபோல மந்திரங்கள் புத்தகத்தில் அச்சாகியிருக்கின்றன என்பதற்காக, அவற்றை யார் வேண்டுமானாலும் கற்றுக் கொண்டு ஜெபம் செய்து விட முடியாது. அப்படி ஜெபம் செய்வது குற்றம் ஆகும்.

புறம்போக்கு நிலங்களில் போய்ச் சிலர் சாகுபடி செய்கிறார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு அரசாங்கமே அவர்களுக்கு அந்த நிலங்களைப் பட்டா போட்டுக் கொடுத்து விடுகிறது. இப்படிப் பலஇடங்களில் நடந்து வருவதை நாம் பார்த்து வருகிறோம்.

மந்திரங்கள் அத்தகைய புறம்போக்கு நிலங்கள் அல்ல. அவற்றை ஒரு குருவினிடமிருந்து முறைப்படி உபதேசம் பெறாமல் ஜெபம் செய்வது பெரும் குற்றமாகும்.

'மலையாள மாந்திரீக அரிச்சுவடி', 'இந்திர ஜாலக் கண்ணாடி' என்பன போன்ற மட்டமான புத்தகங்களில் அச்சிடப்பட்டுள்ள வசிய மந்திரங்களையும் தேள் கடி மந்திரங்களையும் நான் இங்குக் குறிப்பிடவில்லை. உண்மையில் அவை எல்லாம் மந்திரங்களே அல்ல.

மனனம் செய்பவனைக் காப்பாற்றுபவை எவையோ, அவை தாம் மந்திரங்கள் என்னும் பெருமை மிக்க பெயரைத் தாங்குவதற்கு உரிய தகுதி படைத்தவை. இகத்துக்கும் பரத்துக்கும் நமக்கு உறு துணையாக இருந்து வழிகாட்டுபவையே உண்மையான மந்திரங்கள். சௌந்தர்யலஹரி, சூதசம்ஹிதை, தேவி மகாத்மியம்

போன்ற தெய்விக நூல்களில், அத்தகைய மகாமந்திரங்கள் பல கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை அச்சுப் புத்தகங்களில் படித்துவிட்டு, உடனே நாம் பூஜையோ ஜெபமோ செய்ய முற்பட்டுவிடக் கூடாது.

நாம் ஒரு நண்பர் வீட்டுக்குப் போகிறோம். அங்கே அவருடைய மேஜையின் மீது ஒரு பத்து ரூபாய் நோட்டுக் கிடக்கிறது. உடனே நாம் அதை எடுத்துக் கொண்டு விடலாமா? அப்படி எடுத்துக் கொண்டால் அது ஒரு திருட்டுக் குற்றம் ஆகும் அல்லவா? புத்தகங்களிலிருந்து மந்திரங்களை எடுத்துக்கொள்வதும், அத்தகைய ஒரு திருட்டுக்குற்றம் தான்!

ஒவ்வொரு மந்திரத்துக்கும், ரிஷி, சந்தஸ், தேவதை என மூன்று விஷயங்கள் உண்டு. இவற்றுள் ரிஷி என்பவர்தான் அந்த மந்திரத்தை முதல்முதலில் கண்ட உரிமையாளர். அதாவது, வான வெளியில் ஒரு புதிய நட்சத்திரம் உதயம் ஆவதுபோல, அந்த ரிஷியினுடைய ஞான வெளியில்தான் அந்த மந்திரம் முதல் முதலாக உதயமாயிற்று. அவ்வாறு உதயமான அந்த மந்திரத்தைக் கண்டவர்தான் அந்த ரிஷி; அதை உருவாக்கியவர் அல்ல. ஏனென்றால், மந்திரங்கள் எவராலும்உருவாக்கப்பட்டவை அல்ல; அவை தாமே உண்டானவை. அதாவது, இறைவனே அந்த மந்திரங்களின் வடிவத்தில் மகரிஷிகளுக்குக் காட்சி அளிக்கிறார். ஆகையால் மந்திரம் வேறு, அதன் அதிதேவதையாகிய இறைவன் வேறு அல்ல. இந்த உண்மையை நாம் முதவில் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு மகரிஷியானவர் தம் ஞான வெளியில் ஒரு மந்திரத்தைக் காண்பாராயின், தகுதி வாய்ந்த சீடர்களுக்கு அவர் அதை உபதேசம் செய்வார். அந்தச் சீடர்கள் அதைத் தமது சீடர்களுக்கு உபதேசம் செய்வார்கள். இப்படியாக அந்த மந்திரமானது அநாதி காலம் தொட்டுப் பரம்பரை பரம்பரையாக வந்து கொண்டிருக்கும். அத்தகைய குரு பரம்பரையைச் சேர்ந்த ஒருவர்தான், அந்த மந்திரத்தைப் பிறருக்கு உபதேசம் செய்யும் உரிமை படைத்தவர் ஆவார் ஏனென்றால், அவருக்குத்தான் அந்த மந்திரம் பரம்பரைச் சொத்தாக வந்துள்ளது.

அம்மாதிரிப் பரம்பரையைச் சேராத ஒருவரிடம் நாம் மந்திரோபதேசம் பெற்றால், அது நமக்குப் பலன் அளிக்க மாட்டாது; பாவத்தையே அளிக்கும். நமக்கு மட்டும் அல்ல; நமக்கு உபதேசம் பண்ணுகிறவருக்கும் அது பாவத்தைத்தான் உண்டாக்கும்!

ஆகையால், நாம் மந்திரங்களுக்கு ஆசைப்பட்டுக் கண்டபேர்களை எல்லாம் நம் குருவாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. இரமண மகரிஷிக்கு நிகரான ஒரு சாதுவாய் இருந்தாலும் சரிதான். அவர் ஒரு முறையான குரு பரம்பரையில் வந்தாலொழிய, அவரிடமிருந்து நாம் ஞானோபதேசம் பெறலாமே தவிர, மந்திரோபதேசம் பெறக் கூடாது. அத்தகைய உண்மையான சாதுக்கள், தாம் ஒரு முறையான குருவிடமிருந்து பெறாத மந்திரத்தைப் பிறருக்கு உபதேசிக்கவும் மாட்டார்கள்.

இப்போது ஸ்ரீலலிதா சஹஸ்ர